# சிவசக்தி

# SIVASAKTHI

கரு.அ.
தீ.உ.4590.2



இந்து மாணவர் மன்றம்
றோயல் கல்லூரி
கொழும்பு

**HINDU STUDENTS' UNION**
**ROYAL COLLEGE**
**COLOMBO**

எமது விளம்பரதாரர்களை ஆதரியுங்கள்

Please Patronise Our Advertisers

உ

சிவமயம்

# சிவசக்தி

## 1980 - 1981

*இதழாசிரியர்*

செல்வன். சிவப்பிரகாசம் இரவிதரன்.

*வெளியீட்டாளர்*

**இந்து மாணவர் மன்றம்**

**றோயல் கல்லூரி**

கொழும்பு.



# SIVASAKTHY

## 1980 — 1981

EDITOR

**Master. Sivapragasam Ravitharan.**

PUBLISHED BY

**Hindu Students' Union**

**Royal College**

**COLOMBO.**

Extra ordinary
Citizens for
ordinary citizens!

A fantastic range of
Citizen Watches for
the most discriminating
Ladies and Gents and
An elegent selection of
Citizen Wall Clocks
Transistorised and
Cryston Quartz Crystal.

*See the range at*

# SHUMS

**MAIN STREET, COLOMBO.**

*With best Compliments*

*from*

# Rajagopal & Co.,

**Importers, Exporters, Manufacturers,
Representatives, Stockists of
Printing Paper, Printing Machineries,
Stationeries & Books**

145, DEMATAGODA ROAD,
MARADANA — COLOMBO-9.
SRI LANKA

Telephone; 96279 Cable: 'JAPTRAL'

*With the best Compliments*

*from*

# SREE
# VIJAYA MAHAAL
**(EVERSILVER CENTRE)**

Dealers in House Ware for

- ★ EVERSILVER WARES
- ★ GAS COOKERS
- ★ BEST FLASKS & JUGS
- ★ CASSETTES
- ★ CERAMIC
- ★ ENAMEL WARE
- ★ CLASS WARE
- ★ FANCY GOODS

143, GALLE ROAD, WELLAWATTE.

Telephone: 82651

# இந்த மலரில்.....


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தேவாரம் ... ... ... ... ... | 3 |
| 2. | தேவியின் திருநாம அர்ச்சனை ... ... ... | 4 |
| 3. | தமிழ்த் தாய் வாழ்த்து - College Song ... | 5 |
| 4. | Message from the Principal ... ... ... | 7 |
| 5. | பொறுப்பாசிரியரின் ஆசிச் செய்தி ... ... ... | 9 |
| 6. | இந்து மாணவர் மன்ற மாணவ தலைவரிடமிருந்து ... | 11 |
| 7. | சிவசக்தி ஆசிரியர் ... ... ... ... | 13 |
| 8. | ரோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் ... ... | 15 |
| 9. | பாரதியாரும் சக்தி வழிபாடும் ... ... ... | 17 |
| 10. | கலைமகள் விழா பேச்சு, கட்டுரைப் போட்டிமுடிவுகள் ... | 21 |
| 11. | ஈழத்தில் துர்க்கை வழிபாடு ... ... ... | 23 |
| 12. | மதமில்லா வாழ்வேது — இறைவா நீ! ... ... | 25 |
| 13. | சக்திக்கொரு வழிபாடாம் நவராத்திரி ... ... | 27 |
| 14. | சைவ சமயம் ... ... ... ... ... | 29 |
| 15. | அந்தாதி பாடிய அபிராமிப்பட்டர் ... ... ... | 31 |
| 16. | அம்மன் அருள் ... ... ... ... ... | 35 |
| 17. | சக்தி வழிபாடு ... ... ... ... ... | 37 |
| 18. | நாமகள் வெண்பா மாலை ... ... ... | 36 |
| 19. | சிவசக்தி— நான் போற்றுகிறேன் ... ... | 41 |
| 20. | நாவலர் சைவத்தின் காவலர் ... ... ... | 47 |
| 21. | நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே ... | 53 |
| 22. | நவராத்திரி விழா ... ... ... | 59 |
| 23. | நடப்பு வருடத்தில் நாம் ... ... ... | 63 |
| 24. | நன்றி ... ... ... ... | 72 |

*With best Compliments*

*from*

**swissair**

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை யிறையே.

## சிவசக்தி

'' சக்தியும் சிவமுமாய தன்மை இவ்வுலகமெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியுமாகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை எல்லாம்
இத்தையும் அறியார்பீட இலிங்கத்தின் இயல்பு மோரார் ''

'' சக்திதான் நாதமாதி தானாகும் சிவமுமந்தச்
சக்திதானாதி யாகுந் தரும்வடி வானஎல்லாம்
சக்தியும் சிவமுமாகும் சக்திதான் சத்தனுக்குச்
சக்தியாம் சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சக்திதானே. ''

## துர்க்கை

முச்செயலுங் காட்டி அவைபுரக்கு மூவரைத் தன்
இச்சையிற் காட்டி அவருளத்தும் எட்டாயால்
பச்சையிளங் குதலைக் கிள்ளாய் பரையே நின்
விச்சையிவை யென்றால் விடுத்துணர வல்லாரார்.

## இலக்குமி

பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி அழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் சிறீதேவி
தன்னந்திரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே!

## சரஸ்வதி

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணி முத்தைபோலே அறிவுமுத்து மாலையினுள்
காணுகின்ற காட்சியதாய் காண்பதெல்லாம் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே!

## தேவியின் திருநாம அர்ச்சனை

அம்மணீ, ஜகதம்பிகே, கருணாகரீ, பரமேஸ்வரீ,
கண்மணீ, ஜெயகௌரி, காங்கயி, கார்த்திகே, திரிநேத்திரி
தண்மயீ, உபசாந்தினீ, சிவசாம்பவீ, ஏகாம்பரி,
சின்மயீ, சுபசீலீ, மாலினி, தேவி சௌந்தரி ஓம் நமோ

சித் சொரூபிணி, சிம்ம வாஹிநீ, திவ்ய ராஜ ராஜேஸ்வரீ,
பத்ரகாளி, துர்க்கா, பவானி, பராசக்தி, பரிபாலினீ,
வித்வ பூஷணி, மீனலோசனி, வீரநர்த்தனி, விமலினி,
சத்திய வாசனி, நித்திய கன்னி, தயாபரீ நம ஓம் நமோ.

குண்டலீ, சந்த்ர மண்டலி, இளங்கோமளி, இன்ப ஸ்யாமளீ
சண்டிகா, சாமுண்டி, பைரவி, சாவித்திரி, ஜய காயத்ரீ,
அண்டர் நாயகி, ஆபத்பாந்தவி அமுத ஞான பயோதரி
தொண்டர் சாதகி தூய வானதி, சோம சேகரி ஓம் நமோ

சுத்த சக்தீ, சுடர்க்கொடீ, திவ்ய சுந்தரீ, ஸ்ரீ புரந்தரீ
வித்தகீ, தெய்வ நர்த்தகீ, ஜய விஜயி, பாப விநாசினி
சித்த ரஞ்சனி, தெய்வகுஞ்சரி, தேவதா, உமா, பார்வதி,
நித்யவாணி, நிரஞ்சனீ, மலை நீலி சங்கரி, ஓம் நமோ,

சந்த்ர மௌலினி, சரஸ்வதீ, தூய சாரதா, ஜய பாரதீ,
சுந்தராங்கி, சுரநுதா, விஸ்வசோபிதா, சம்ப்ரபாவதீ,
மந்திர ரூபிணி, மா பகவதீ, மாகிஷா சுரமர்த்தனீ,
தந்த்ர சாதனி, செஞ்சடாதரி சர்வதாரகி, ஓம் நமோ,

அஷ்டலக்ஷ்மி, அபய ஹஸ்தனி, அமலினி, கமலாசனீ
நிஷ்டை யோகினி, நிமலவாகினி, நிஷ்களங்க சன்யாசினீ,
துஷ்ட நிக்ரஹி, தூய வைஷ்ணவீ, ஜோதி, வேணி, சுமங்கலீ
சிஷ்டரக்ஷகி, ஸ்ரீ வராகினி, சீதளீ நம ஓம் நமோ,

பூரணீ, ஞானபூஷணீ, வேதபோதனீ, தர்மசாதனீ,
ஆரணீ, பலசீரணீ, உலகாண்டவீ, உக்ரதாண்டவீ
காரணீ, சிவகாமினீ, ஜீவகாருணி, ஜகன் மோகினீ
நாரணீ, பவதாரணீ, புவிநாயகீ, நம ஓம் நமோ.

# தமிழ் வாழ்த்து

வாழ்க தமிழ் மொழி! வாழ்க நிரந்தரம்!
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ் கடல் வைப்பினும் தன்மணம் வீசி
எழில் கொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தாய்மொழி!
என்றென்றும் வாழிய வே!

# College Song

(1) Thy spirit First to life awoke,
In eighteen hundred and thirty five,
Beneath the sway of Marsh and Boake,
Thenceforth did Lanka's learning thrive.
Refrain.
School where our fathers learnt the way before us.
Learnt of books and learnt of men, Through thee we will do the same.
True to our watch word "Disce Aut Discede"
We will learn of books and men and learn to play the game.

(2) Within thy shade our fathers trod.
The path that leads to man's estate.
They have repaid the debt they owed,
They kept thy fame inviolate.

(3) And we their loyal sons now bear,
The torch with hearts as sound as oak,
Our Lusty throats now raise a cheer,
For Hartley, Harward, Marsh and Boake.

*With Compliments*

*from*

# SIEDLES CINE RADIO

**FRONT STREET,**

**COLOMBO - 11.**

# Message from the Principal

Today - in a world where violence is on the increase and the crime rate is soaring, it is to religion that we must turn for comfort and hope. A publication of this nature is of tremendous value, expecially in a school like Royal College where students of diverse races and creeds meet and mingle. While this will be a source of great spiritual strength and inspiration to all our Hindu Students it will also do much to foster a greater understanding among students of different religious beliefs.

Much can be learnt from the words of wisdom this volume contains.

I extend my congratulations to all those whose enthusiasm are dedication made possible this publication. My sincere good wishes to the Union for its continued progress.

*L. D. H. Peiris*
Principal.

Royal College,
Colombo.
3rd October 1980.

With the best Compliments

of

# Walker & Greig Ltd.

DARLEY ROAD,

COLOMBO – 10.

# பொறுப்பாசிரியரின் ஆசிச் செய்தி

றேயல் கல்லூரியின் இந்து மாணவர் மன்றம் வெளியிடும் மலருக்கு ஆசிச் செய்தியளிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1969-ம் ஆண்டு வெளியாகிப் பின்னர் தொடர்ந்து வெளிவராதிருந்த இம் மலராகிய ''சிவசக்தி'' இவ்வாண்டு வெளிவருவது இம் மன்றம் எடுத்த பெருமுயற்சியின் விளைவாகும். இவ்வாண்டு இதன் வெளிவருகை இந்து மாணவர் மன்றத்தில் ஒரு மறுமலர்ச்சியென்றே கூறவேண்டும்.

கடந்த ஆண்டுகளில் இம்மலர் பல அரிய கட்டுரைகளையும், கவிதைகளையும் தாங்கி வெளிவந்ததை மாணவர், ஆசிரியர், பெற்றோர் அனைவரும் நன்கறிவர். சிறந்த கல்விமான்கள், சமயப்பெரியார்கள், சைவ அறிஞர்கள் ஆகியோரிடமிருந்து இம் மலருக்கான விடயங்கள் பெறப்பட்டன. ஆனால் இவ்வாண்டு வெளிவரும் ''சிவசக்தி'' மாணவர்களது ஆக்கங்களையே முக்கியமாகக் கொண்டுள்ளமை முக்கிய அம்சமாகும். இது எமது மாணவரின் எழுத்தாற்றலை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

சமய விடயங்கள்பற்றிச் சொற்பொழிவாற்றுவோர், சமயக் கட்டுரைகள் எழுதுவோர் குறைந்துவரும் இக்காலத்தில் இவ்விடயங்கள் பற்றிப் பேசவும் எழுதவும் வல்ல திறமையை மாணவர் சமூகம் பெறுவது அவசியமாகும். ஏனெனில் சமய இலக்கியங்களே மனிதனை மனிதனாக வாழவும், அவனைத் தேவ நிலைக்கு உயர்த்தவும் வல்லன. இத்தகைய இலக்கியங்களில் மாணவர் தேர்ச்சி பெற்று எழுத்தாற்றல்களைப் பெறுவது எதிர்காலச் சமூகம் சிறப்புற வழிவகுக்கும். இந்தவகையில் ''சிவசக்தி'' மாணவர்க்குப் பெரிதும் நன்மைபயப்பதாக அமையும் என்பது எனது நம்பிக்கை. தொடர்ந்து இம்மன்றம் கலைமகள் விழாவுடன் இயைந்த முறையில் இதனை வெளியிடவேண்டும் என்பது எனது அவா. இம்மலர் வெளிவருவதற்கு எமது மாணவர்களின் முயற்சி முக்கியமானது. அவர்கள் எல்லா நலனும்பெற இறைவனை பிரார்த்தித்து அமைகிறேன்.

**திருமதி. த. முத்துலிங்கம்**
பொறுப்பாசிரியர்,
இந்து மாணவர் மன்றம்.

றேயல் கல்லூரி,
கொழும்பு 7.

*With the best Compliments*

*of*

# RENUKA GROUP OF COMPANIES

P. O. Box No. 1403

69, SRI JINARATNA ROAD,

COLOMBO - 2.

Cable: 'RARENCO'

Telex: 21324 RARENCO CE
COLOMBO

Phone: 22694 & 36778

# இந்து மாணவர் மன்ற மாணவ தலைவரிடமிருந்து...

'' அவன் அருளாலே அவன் தாள் வணங்கி ''

அவன் புகழை மாணவர் மத்தியிலே வேரூன்றச் செய்துவரும் எமது மன்றத்தின் இன்னுமொரு அரு முயற்சியாக 'சிவ சக்தி' என்னும் மகுடத்தின் கீழ், மணம் பரப்பும் இம் மலர், 'கலைமகள் விழா' தனில் வெளிவரும் தருணத்தில் இந்து மாணவர் மன்ற மாணவ தலைவர் என்ற முறையிலே எனது வாழ்த்துகளை கூறுவதில் நான் பெருமகிழ்வெய்துகிறேன்.

அன்பும், மெய்யறிவும் கொண்டு அருவமானதும், அனாதியானதுமாகிய இறையை நகைமிக்க தந்தையாக, தயைமிக்க தாயவளாக, குணமிக்க குருவாக, கொஞ்சும் குழந்தையாக, கனிந்த காதலுருவமாக, ஆத்மார்த்தமாக விளங்கும் தினம் நவராத்திரி தினம். இத் தினத்திலே மாணவரிடத்தே 'இலை மறை காயாக' மறைந்திருக்கும் திறமையை, இறையன்பை வெளிக்கொணருமுகமாகவே 'சிவசக்தி' என்னும் பொருத்தமான மகுடத்தின் கீழ், 'கலைமகள்விழா' தனில் இம்மலர் வெளிவருகின்றது. 1970-ம் ஆண்டிற்குப் பின்னர் இம்மலர் இன்று மீண்டும் பூத்து நறுமணம் வீசுகின்றதென்பதை பெருமையுடன் குறிப்பிடும் அதே வேளையில் இம் முயற்சிக்கு சென்ற வருட மன்றத்தின் வழிகாட்டலே அடித்தளமாக அமைந்தது என்பதையும் நன்றியுடன் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மடல் வற்றினாலும் மணத்தில் குறைவுபடாத மலர்போல, உடல் வற்றினாலும் உள்ளத்தில் ஊக்கம் குன்றாது தமது உழைப்பை ஒன்றுமையுடன் இம்மலர் மலர எருவாக்கிய சக மாணவர்களுக்கும் நன்றி கூற நான் கடமைப்பட்டுள்ளேன்.

இம் மலர் எதிர்காலத்திலும் பூத்துக் குலுங்கிடவும், இன்றைய மாலைப் பொழுது என்றும் மறக்கமுடியாத இனிய பொழுதாகவும் 'மதம் ஆகியும்' மதத்தைக் கடந்து வாய்மையாகியும் விளங்கும் இறைவனை' வேண்டி அமைகிறேன்.

**முத்துக்கிருஷ்ணன் நித்தியானந்தன்**
மாணவ தலைவர்
இந்து மாணவர் மன்றம்

With the best Compliments
of
CRESANT ENTERPRISES LTD.
283, LAYARDS BROADWAY.
COLOMBO - 14.
T'phones: 29227 - 34685 Telex: 21501 CE

With the best Compliments

of

CRESANT ENTERPRISES LTD.

283, LAYARDS BROADWAY,

COLOMBO - 14.

T'phones: 29227 - 34885

Telex: 21501 CE



# "சிவசக்தி"

## ஆசிரியர் உரை

'சக்தியில்லையேல் சிவமில்லை' 'சிவமில்லையேல் சக்தியில்லை' என்ற திருவாக்கிற்கிணங்க அருவாய், உருவாய், இலதாய் பல வடிவெடுத்து சிவசக்தியாய் ஒன்றிணைந்து நின்று எம்மை உய்விக்கும் அந்த பரம் பொருளை பணிந்து, இம் மலருக்கு 'சிவசக்தி' என்ற மகுடமிட்டு உங்கள் முன் இன்று சமர்ப்பிக்கின்றோம்.

மாணவர் உள்ளத்தின் அடித்தளத்திலே ஊற்றெடுக்கும் கலை உணர்ச்சி தனை, திறமை தனை, வெளிக்கொணரு முகமாகவே இம் மலர் பூத்திருக்கின்றது. 1962ம் ஆண்டு முதல் 1970ம் ஆண்டு வரை பக்தி மணம் பரப்பிய இம்மலர் இடையில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக வாடி நின்றது. மீண்டும் அதனை புஷ்பித்து பல வகைகளிலும் மெருகேற்றி சுகந்தம் பரப்பும் இனிய மலராக இவ்வாண்டு படைத்திருக்கிறோம் என்று கூறிக்கொள்ளும் அதேவேளையில் இதழாசிரியராக என்னை தேர்ந்தெடுத்து ஆக்கமும், ஊக்கமும் நல்கிய இந்து மாணவர் மன்ற நிர்வாகிகளுக்கு நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளேன,

சிறியோன் நான் ஏதும் தவறுகள் இம் மலரில் இழைத்திருப்பின் 'குற்றம் களைந்து குணங் காணுமாறு' உங்களை வேண்டி, இம் மலர் எதிர்காலத்திலும் பூத்து நறுமணம் பரப்பிட நாத பிந்து கலாஸ் வருபமாக விளங்கும் 'சிவசக்தி'யை பிரார்த்தித்து அமைகிறேன்

வாழ்க சிவசக்தி
வளர்க நின்புகழ்

சிவப்பிரகாசம் இரவிதரன்
இதழாசிரியர்
சிவசக்தி

**MANSAN JEWELLERS**

**MANSAN TRAVEL SERVICE**

Tel: 28887 Head Office 25 A, Mudalige Mawatha, Colombo-1.

Tel: 26927 Branch — 159, Galle Road, Colombo-3.

Tel: 031-2687 ,, 10 B, Cemetry Road, Negombo.

Tel: 96143 Residence 32, School Lane, Colombo-9.

SRI LANKA.

Please Call **24252**

**GEMS TRAVEL SERVICE**


**83, YORK STREET,**

**COLOMBO-1.**

*For Very Competitive Air Fares*

*THANK YOU.*

# றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் 1980 — 81



இருப்பவர்கள்: (இடமிருந்து வலம்)
திருமதி. T. முத்துலிங்கம் (பொறுப்பாசிரியர்), திரு. S. இரத்தினசபாபதி (பொறுப்பாசிரியர்), செல்வன். C. A. கருணாதேவா (செயலாளர்), திரு. L. D. H. பீரிஸ் (அதிபர்), செல்வன். M. நித்தியானந்தன் (மாணவ தலைவர்), திரு. K. கந்தசாமி (பொறுப்பாசிரியர்), திருமதி. S. சிறீகாந்தா (பொறுப்பாசிரியர்), செல்வி. S. செல்லையா (பொறுப்பாசிரியர்).

நிற்பவர்கள்: (இடமிருந்து வலம்) செயற்குழு உறுப்பினர்கள்: செல்வன். K. இந்திரஜித், செல்வன். K. ரூபசேனன், செல்வன். M. முரளீதரன், செல்வன். G. பிரபாகரன், செல்வன். P. ஜெகதீசன், செல்வன். E. ஆனந்தசிவகுமார்.

# றோயல் கல்லூரி

# இந்து மாணவர் மன்றம்

# 1980-81

தலைவர்: திரு. L. D. H. பீரிஸ் (அதிபர்)

பொறுப்பாசிரியர்கள்:

திருமதி. T. முத்துலிங்கம்
செல்வி. S. செல்லையா
திரு. S. இரத்தினசபாபதி
திரு. K. கந்தசாமி
திருமதி. S. சிறீகாந்தா

மாணவ தலைவர்: செல்வன். M. நித்தியானந்தன்

செயலாளர்: செல்வன். A. கருணாதேவா

செயற்குழு உறுப்பினர்கள்:

செல்வன். M. முரளீதரன்
,, G. பிரபாகரன்
,, P. ஜெகதீசன்
,, K. ரூபசேனன்
,, K. இந்திரஜித்
,, E. ஆனந்த சிவகுமார்

# This Bank now has a decade to its credit.

When we talk of credit we do not refer to financial matters only.

We mean courtesy and efficiency. The ability to understand, assess and respond to the need of businessmen big and small in a rapidly developing country.


With our network of 25 branch offices, we credit ourselves with being right there, when the nation wants us.

HATTON NATIONAL BANK LIMITED

HATTON NATIONAL BANK LIMITED.

Head Office: 16, Janadhipathi Mawatha Colombo 1. Telephone: 21885

Mel Ads 212



# ★ பாரதியாரும் சக்தி வழிபாடும் ★

( க. கந்தசுவாமி, ஆசிரியர், றோயல் கல்லூரி. )

பாரதியார் முதன்முதலாகத் தமிழிலே தேசிய உணர்வுப் பாக்களையும், சமூக சீர்திருத்தப் பாக்களையும் பெருமளவுக்குப் பாடிப் புகழ் பெற்றவராவர். அதனுல் அவரைத் தேசியக் கவி மறுமலர்ச்சிக் கவி, சமுதாய சீர்திருத்தக் கவி, புதுயுகக் கவி, எனக் கூறுவர். இவையனைத்தும் பாரதியாருக்குப் பொருந்துவனவேயாம். ஆனுல் அவர் சமய உணர்வு இல்லாதவர்; சமய நெறிக்கு மாருனவர் எனப் பலர் கருதுகின்றனர். அவர் பாடிய சமயப் பாக்களை அறியாமையே இதற்கு காரணமாகும்.

தேசிய, சமுதாயப் பாக்களைப் பாடிய அளவுக்குப் பாரதியார் சமயப்பாக்களையும் பாடியுள் ளார். பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாரத நாட்டில் நிலைபெற்று வந்த அரும் பெரும் சமய உண்மைகள் அவரது சமயப் பாக்களில் நிறைந்து உள்ளன. பாரதியாரின் சமய உணர்வுகள் அவரது பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, சுயசரிதை, வேதாந்தப் பாடல் ஆகிய பகுதிகளி லும் உள்ளன. அவரின் சமயப் பாக்களை நோக்குவார் பாரதியார் உறுதியான சமயக்கவி எனக் காண்பர்.

பாரதியாரின் சமயப் பாக்களுட் பெரும்பகுதி சக்தியைப் பற்றியன. அவை சக்தி தத்து வங்களையும், பெருமைகளையும் தெரிவிப்பன. அவை சிறந்த சக்தித் துதிப்பாக்கள். சமுதாயத் துறைகளுட் புதுமுறைகளை மேற்கொண்டது போலச் சமயத் துறையிலும் அவர் புதுமுறைகளை மேற்கொண்டுள்ளார். தேசிய சமுதாய மொழித்துறைகளிற் புதிய மறுமலர்ச்சியைப் பாரதியார் தோற்றுவித்தமை போலச் சமயத்துறையிலும் புதிய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்துள்ளார்.

சிவ வழிபாட்டைப் போலச் சக்தி வழிபாடும் மிகப் பழமை வாய்ந்தது. பாரத நாட்டிலும் தமிழகத்திலும் மேற்குக் கிழக்கு நாடுகளிலும் நிலைபெற்றிருந்தது. ஞானிகளும் அரசர்களும் பொதுமக்களும் சக்தியை வழிபட்டனர். உருவம் பெயர் குணம் முதலியன இல்லாத, சொல் லுக்கும் நினைவுக்கும் அப்பாலான சிவம் ஆன்மாக்களுக்கு அருள்வதற்காகச் சக்தியாகி ஐந்தொழி லைச் செய்கிறது எனச் சைவசமயம் கூறுகிறது. 'அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை' எனச் சிவ யோகியான திருமூலர் கூறியுள்ளார். சமய குரவர் அருணந்தி சிவாச்சாரியார், குமரகுருபரர், தாயுமானவர் ஆகியோர் சக்தியை பரவியுள்ளனர்.

சக்தியின் பெருமைகளையும் வழிபாட்டு முறைகளையும் விளக்கி ஆதியில் சாக்த ஆகமங்கள் வெளிவந்தன. வியாச முனிவர் சக்தியின் பெருமைகளைப் பற்றித் தெரிவித்தவை தேவிபாகவதம் என்னும் நூலாக உள்ளது. இதன் பின் அத்துவித வேதாந்த நெறியைப் பரப்பிய ஆதி சங்க ரர் சக்தியைத் துதித்துச் சௌந்தரிய லகரி என்னும் நூலை அருளினுர். அபிராமிப்பட்டர் என் பார் அபிராமி அந்தாதியை அருளினுர். இந் நூல்களுக்குப் பின் பாரதியாரின் சக்தித் துதிப் பாக்கள் குறிப்பிடத்தக்கன. அண்மைக் காலத்தில் சக்தி வழிபாட்டின் தத்துவங்களையும் பெரு மைகளையும் பயன்களையும் உணர்த்தியவர் பாரதியாரே ஆவர். உயர்ந்த சமய தத்துவங்களும் சாக்த தந்திரங்கள் சௌந்தரிய லகரி போன்ற உயர் நூல்களின் கருத்துக்களும் பாரதியாரின் சக்திப் பாக்களில் உள.

சிவசக்தி, மகாசக்தி, ஓம் சக்தி, சக்திக்கூத்து. சக்தி விளக்கம், வையம் முழுதும், காணி நிலம், அகவல், விண்ணப்பம், ஆத்ம சமர்ப்பணம், சக்தி விளக்கம், பேதை நெஞ்சே, சக்தி திருப்புகழ், நவராத்திரி, யோகசித்தி, ஊழிக் கூத்து, மகா காளி, முத்துமாரி, திருமகள், கலைமகள், அன்னையை வேண்டுதல் ஆகிய பல வகைகளிற் சக்தியைப் பாரதியார் பாடிப் பரவியுள்ளார்.

பாரதியாரின் சக்திப்பாக்கள் மிகச் சக்தி வாய்ந்தன. சக்தியின் எல்லையில்லாப் பெருமைகளை எண்ணித் தன்னை மறந்து பாரதி சக்திதாசன் ஆகினுர். அளப்பரிய சிவத்தின் பெருமைகளில் ஈடுபட்டு அவைகளை வெளிப்படுத்த வந்த சேக்கிழார் சுவாமிகளின் உள்ளம் வீறுநடை போடுவதைப் பெரிய புராணத்திற் பார்க்கின்ருேம். சக்தியின் பெருமைகளை வெளிப்படுத்தும் பாரதியாரின் உள்ளம் வீறுநடை போடுவதை அவரின் சக்தித் துதிப்பாக்களில் பார்க்கலாம். பாரதியார் அனைத்தையும் சக்தியாகக் கண்டார். கண்ணன் என் தாய் என்னும் பகுதி சக்தி தத்துவங்களை வெளிப்படுத்துகிறது. பாரதி சக்தியைச் சக்தியின் உருவாகப் போற்றினுர். தேசியப் பாக்களிலும் பாஞ்சாலி சபதத்திலும் அவரது சக்தி உணர்வுகள் வெளியாகின்றன.

பாரதியார் சக்தியைப் பற்றி எளிமையாகவும் புதுமையாகவும் விளக்கம் தந்துள்ளார். சிவசக்தி என்னும் பகுதியில் 'இயற்கை யென்னுரைப்பார் சிலர் - இணங்கும் ஐம்பூதங்கள் என்றுரைப்பார்' எனவும். மகாசக்தி வெண்பாவில் 'தன்னை மறந்து சகல உயிர்களையும் மன்ன நிதங் காக்கும் மகாசக்தி' எனவும், ஓம் சக்திப் பகுதியில் 'நல்லதும் தீயதும் செய்திடும் சக்தி அவள் பேர் ஓம் சக்தி' எனவும், பராசக்தி எனும் பகுதியில் 'மழையும் காற்றும் அவள் செய்கைகாண்' எனவும், சக்தி விளக்கத்தில் ஆதி சிவனுடைய சக்தி' எனவும், இமையவருந் தொழுந்தேவி முருகன் என்போம் சங்கரன் என்போம் கண்ணன் என்போம்' எனவும், காளி தோத்திரத்தில் 'யாதுமாகி நின்ருய் காளி எங்கும் நீ நிறைந்தாய் பூதம் ஐந்தும் ஆனுய் ஆதிசக்தி தாயே' எனவும் கூறியுள்ளார்.

யோகசித்தியில் விண்ணும் மண்ணும் தனியாளும் வீரசக்தி' எனவும், மகாசக்தி வாழ்த்தில் 'விண்டுரைக்க அறிய அரியதாய் விரிந்தவான வெளியென நின்றனை அண்டகோடிகள் வானில் அமைத்தனை, பரிதி என்னும் பொருளிடை ஏய்ந்தனை கரிய மேகத் திரளெனச் செல்லுவை, நீள் கடலென விரிந்தனை, வாயுவாகி வெளியை அளந்தனை' வாழ்வெதற்கும் உயிர்நிலை ஆகுவை, தேயுவாகி ஒளியருள் செய்குவை, பாயும் ஆயிரம் சக்திகளாகியே பாரில உள்ள தொழில்கள் இயற்றுவை, நிலத்தின் கீழ் பல உலகங்கள் வைத்தனை, தலத்தின் மீது மலையும் நதிகளும் சாருங் காடும் சுனைகளும் ஆயினை' எனச் சக்தியின் பெருமைகளைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

இத்துணைப் பெருமைகள் உள்ள சக்தியைத் துதித்தற்கும் பாரதியார் அப்பர் சுவாமிகளின் நெறியிற் புதுவழியைச் 'சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம்' என்னும் பகுதியிற் கூறியுள்ளார். 'கையைச் சக்தி தனக்கே கருவியாக்கு அது சக்தியுற்றுக் கல்லினையும் சாடும்' 'செவியைச் சக்தி தனக்கே கவியாக்கு அது சக்தி மொழியது கேட்கும்' 'வாய் சக்தி தனக்கே கருவி யாக்கு அது சக்தி புகழினை முழங்கும்' 'மெய்யைச் சக்தி தனக்கே கருவியாக்கு சிவ சக்தி தரும் திறனதில் ஏனும்' 'நெஞ்சம் சக்தி தனக்கே கருவியாக்கு அது சக்தியுற நித்தம் விரிவாகும்' 'கால் சக்தி தனக்கே கருவியாக்கு அது சாடி எழு கடலையுந்தாவும்' 'மனம் சக்தி தனக்கே கருவியாக்கு அது சக்தி நுட்பம் யாவினையும் நாடும்' 'மதிசக்தி தனக்கே கருவியாக்கு அது சாரவருந் தீமைகளை விலக்கும்' 'அகம் சக்தி தனக்கே கருவியாக்கு அது தன்னையொரு சக்தியெனத் தேரும்' என மிக எளிமையாகச் சக்தி வழிபாட்டிற்கு அனைவரையும் பாரதியார் வழிப்படுத்துகிறுர்,

பாரதியார் சக்தியை வணங்குதலாற் பெறும் பயன்களையும் தெரிவித்துள்ளார். 'சக்தியருள் கூடிவிடுமாயின் உயிர்சந்ததமும் வாழும்' 'நித்தமிங்கவள் சரணே நிலையென் றெண்ணி நினக்குள்ள குறைகளெல்லாந் தீர்க்கச் சொல்லிப் பக்தியினுற் பெருமையெல்லாம் கொடுக்கச் சொல்லி பசி பிணிகளில்லாமற் காக்கச் சொல்லி உத்தம நன்னெறியிலே சேர்க்கச் சொல்லி உலக நாயகிதான் உரைப்பாய் நெஞ்சே' எனக் கூறிய பாரதியார் 'என்றன் உள்ள வெளியில் ஞானத் திறவியேற வேண்டும் குன்ற மொத்த தோளும் மேருக் கோலம் ஒத்த வடிவும் நன்றை நாடு மனமும் நீ நாளும் ஈதல் வேண்டும்' முன்னைத் தீவினைப் பயன்கள் மூளா தழித்திடுதல் வேண்டும் இனி என்னைப் புதிய வுயிராக்கி எனக்கு ஏதும் கவலையறச் செய்து என்றும் மகிழ்ச்சியோடிருக்கச் செய்வாய்' எனச் சக்தியை வேண்டுகின்ருர்.

தனிமனிதத் தேவைக்காகச் சக்தியை வேண்டுதல் போல சமூகத் தேவைகளுக்காகவும் பாரதியார் சக்தியை வேண்டுகிறார். 'நின்னருள் வேண்டுகின்றோம் எங்கள் நீதியும் தருமமும் நிலைப்பதற்கே' 'எம்முயிர் ஆசைகளும் எங்கள் இச்சைகளும் செயல்களும் துணிவுகளும் செம்மையுற்றிட அருள்வாய் எனச் சமூகத்திற்காகத் துதித்த பாரதியார் உலக நன்மைக்காக 'வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே' எனச் சக்தியை வேண்டுகின்றார்.

பாரதியாரைப் போல யாமும் எமக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் உலகிற்கும் ஆக நாளும் சக்தியைத் துதித்துச் சக்தி பெறுவோம். தேசீய சமுதாயத் துறைகளிற் பாரதியைப் பின்பற்றும் யாம் சமயத்துறையிலும் பாரதியைப் பின்பற்றுதல் வேண்டும். பாரதியை யாம் முழுமையாகப் பின்பற்றுவதாயின், பாரதி நெறியின் முழுமைப் பயனைப் பெறுவதாயின் பாரதியின் சமய நெறியையும் பின்பற்றியாக வேண்டும். இன்று தனிமனிதர்க்கும் நாடுகளுக்கும் அனைத்துத் துறைகளிலும் அனைத்துச் சக்திகளும் வேண்டும். இன்று தனிமனிதர்க்கும் சமூகங்களுக்கும் நாடுகளுக்கும் உலகிற்கும் உள்ள பிரச்சினைகள் அனைத்தும் தீருவதற்குப் பாரதியார் காட்டும் சக்தி வழிபாடு ஒன்றே வழியாகும்.

ஓம் சக்தி ஓம்

★


**WITH THE COMPLIMENTS OF**



METROPOLITAN AGENCIES LTD.

COLOMBO - 2.

*With best Compliment from*

# *Asoka Rubber Industries Limited*

**202/4, Kandy Road,**

**PELIYAGODA.**

Manufacturers of

MOULDED and EXTRUDERED

*Quality Rubber Products*

றேயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம்

# "கலைமகள் விழா" வை ஒட்டி

றேயல் கல்லூரி இந்து மாணவர் மத்தியில் நடத்திய

# பேச்சு, கட்டுரைப் போட்டியின் முடிவுகள்

கட்டுரை போட்டி:

மேல் பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம்: | செல்வன். | P. ஜெயசங்கர் |
| 2ம் இடம்: | செல்வன். | N. ஜனகன் |
| 3ம் இடம்: | செல்வன். | M. வரகுணன் |

மத்திய பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | செல்வன். | S. விபுலானந்தா |
| 2ம் ,, | ,, | S. சிவசங்கர் |
| 3ம் ,, | ,, | S. சிவகுமாரன் |

கீழ் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | செல்வன். | கு. தயாபரன் |
| 2ம் ,, | ,, | அமர்நீதி |
| 3ம் ,, | ,, | பாஸ்கரன் |

பேச்சுப்போட்டி;

மேல் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | செல்வன். | N. ஜனகன் |
| 2ம் ,, | ,, | M. யோகவரதன் |
| 3ம் ,, | ,, | B. புஷ்பாகரன் |

மத்திய பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | செல்வன். | E. ஆனந்தசிவகுமார் |
| 2ம் ,, | ,, | N. அருள்குமரன் |
| 3ம் ,, | ,, | P. இந்திரஜித் |

கீழ் பிரிவு

| | | |
|---|---|---|
| 1ம் இடம்: | செல்வன். | S. அருச்சுனன் |
| 2ம் ,, | ,, | K. ஆனந்தகுமரன் |
| 3ம் ,, | ,, | N. நவகிரிதரன் |

*With best Compliments*

*from*

# LALITHA JEWELLARY MART

(Jewellers and Gem Merchants)

**99, 101, 103, 105,**

Sea Street, Colombo - 11.

SRI LANKA

Telephone; 23691 Cables: 'LALITHAS'

நவராத்திரியின் பொருட்டு
ரேயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் நடாத்திய கட்டுரைப்போட்டியில் மத்திய பிரிவு
1ம் இடத்தைப் பெற்ற கட்டுரை.

# ✶ ஈழத்தில் துர்க்கை வழிபாடு ✶

செல்வன். சி. விபுலானந்தா 8T 2

மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடறிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்

நமக்கு ஏதாவது வேண்டுமானல் முதலில் நாம் நமது தாயாரையே நாடுவோம் பின்னர் தாயார் தான் நமது விஷயத்தைத் தந்தையிடம் கூறி அனுமதி பெற்றுத் தருகிருர். இது தான் நம்மிற் பெரும்பாலானேரது இல்லங்களில் நடைபெறுகின்றது. இதேபோல் தான் நாம் அனைவரும் பூவுலகவாசிகள் அனைவர்க்கும் ஒரே தாயாக விளங்கும் துர்க்கையை வழிபட்டு அருளை வேண்ட அவள் எந்தையான தமது கணவரிடம் கூறி நமக்கு சீக்கிரத்தில் அருளினைப் பெற்றுத் தருகிருர் என்று கூறப்படுகிறது. இப்படியாக அருளினை வாரி வழங்கும் அந்தத் துர்க்கை வழிபாடு ஈழத்தில் எப்படி வளர்ந்தது எவ்வாறு போற்றப்படுகிறது என்பது பற்றித்தான் ஈழத்தில் துர்க்கை வழிபாடு என்ற மகுடத்தின் கீழ் நாம் இங்கு ஆராய விழைகின்ருேம்.

நாம் வாழ்வாங்கு வாழ்ந்து வரும் இவ் இலங்கைத் தீவினிலே சில வழிபாடானது தொன்று தொட்டே வளர்ந்து வந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் பல. அவற்றுள் முதன்மையானவை காலத்தால் முற்பட்ட பழம்பெரும் ஈச்சரங்கள் ஐந்துமாகும்.

ஈழத்தில் சோழர் காலத்தில் இராசதானியாகவிருந்த பொலன்னறுவையிலே, பத்தொன்பதாம் நூற்ருண்டிலே மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது சைவசமயத் தெய்வத்தொகுதியைச் சேர்ந்த சிவன், பார்வதி, நடராஜன் ஆகிய விக்கிரகங்கள் கிடைத்தன. இவற்றுடன் கல்லில் பதித்த சிவலிங்கம், நந்தி, துர்க்கை ஆகிய திருவுருவங்களும் கிடைக்கப்பெற்றன. இவற்றுள் எழில் மிகு துர்க்கையின் அருள் மிகு திருக்கோலத்தில் திழைத்த ஆராய்ச்சியாளர் அதனை அங்கிருந்து கொழும்பு நூதனசாலையின் சிற்பப்பகுதிக்கு இடம்பெயர்த்துக் காட்சிக்கு வைத்துள் ளனர்.

அவிசாவளைப் பகுதியிலே உள்ள சீதா கங்கைக்கு அண்மையில் அமைந்தது சீதாவாக்கை ஆகும். இங்கேவணங்காமுடி மன்னனுக மாயாதுன்னை என்ற சிங்கள அரசன் செங்கோல் செலுத்தினன். அவனுக்கு இராசசிங்கன் என்ற வீரமிகு இளைஞன் மகனுக இருந்தான். இராசசிங்கனுக்குத் தனது வீரத்தின் மேல் ஏற்பட்ட ஆணவத்தினுல் தந்தையைக் கொன்று இராச பாரத்தைப் பெற்ருன். எனினும், அவனை பிரம்மஹத்தி தோஷம் பீடிக்கவே அவன் விமோசனம் வேண்டி இந்துமதக் குருமாரை நாடினன். விமோசனம் பெற்ற அவனை, இந்துமதக்குருமார் வேண்டிக் கொண்டதற்கிணங்க கோயில் சமைத்தான் அது காளி கோயிலாய் அமைந்தது. சிவதொண்டரின் வேண்டுகோளுக்கமைய கட்டப்பட்டமையின் பேராண்டி கோயில் எனப்படலாயிற்று.

கி. பி. 1475 இல் சிங்கைப்பரராசசேகரன் என்பவன் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலை நகரான நல்லூரை அழகுபடுத்த முயற்சித்தான். அவன் நகரின் நான்கு திக்குகளிலும் நான்கு கோயில்களைக் கட்டுவித்தான். அவை சட்டநாதர் கோயில், வெயிலுகந்தைப் பிள்ளையார் கோயில், வீரமாகாளி அம்மன் கோவில், கைலாசநாதர் கோயில் என்பன. பதினைரும் நூற்ருண்டின்

நடுப்பகுதியில் சங்கிலியன் போர்த்துக்கேயருக்கெதிரான போருக்குப் புறப்படுமுன் வீரமாகாளியைத் தரிசித்துச் சென்று, பெருயுத்தத்தின் பின் அவர்களை வென்றடக்கினுன் எனச் சரித்திரம் கூறும். இவ்வாறுன நிகழ்ச்சிகளில் இருந்து அக்காலத்தில் இருந்து மக்கள் துர்க்கையை எவ்வளவு நம்பிக்கையுடன் தொழுதனர் என்பது தெட்டத் தெளிவாகப் புலனுகும் என்பது எனது எண்ணம்.

ஈழத்தில் துர்க்கையை மூலஸ்தானக் கடவுளாகக் கொண்ட ஆலயங்கள் மிகக் குறைவேயானுலும், ஈழச்சைவர் துர்க்கை வழிபாட்டில் பின்னிற்கவில்லை. அவர்கள் அந்தத்தேனினும் இனியாளை துர்க்கை, மலைமகள், சாமுண்டி, பகவதி, தேவி, காளி, பூரணி, தாரணி என இன்னேரன்ன பெயர்களால் பூசித்துத் தொழுதேத்துவர். துர்க்கைக்குரிய நாள் செவ்வாய்; காலம் இரவு ஆகும். ஈழத்தில் துர்க்கை வழிபாட்டுடன் மட்டும் நின்றுவிடாது கேதார கௌரி விரதம், வரலட்சுமி விரதம், நவராத்திரி விரதம் என விரதங்களை அனுட்டித்தும் அவர்கள் வழிபடுவர்.

இந்த விரதங்களுள் ஈழத்தில் பெரும்பாலானேரால் அனுட்டிக்கப்படுவது நவராத்திரி விரதம் என்றே கூறலாம். அதனைப்பெரும்பாலாக சிறியோர் முதல் பெரியோர் வரை, மாணவர் முதல் ஆசிரியர் வரை அனுட்டிப்பர். இந்த நவராத்திரியின் சிறப்பை பாடசாலைகளில் நடைபெறும். குறிப்பாக இன்று உரேயல் கல்லூரியில் நடைபெறும் கலைமகள் விழாவில் கண்கூடாகக் காணலாம்.

ஈழத்தில் துர்க்கையை மூலஸ்தானத்திற் கொண்ட ஆலயங்களுள் பிரசித்தமானவை நயினை நாக பூடணி, தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயம், திருமலைப் பத்ரகாளி கோவில் போன்றனவாகும்.

ஈழத்தில் துர்க்கை வழிபாடானது மேலும் சிறப்புற்று வளர்ந்தோங்க சைவராகிய நாம் முயற்சிப்போமென இந்த நவராத்திரி காலத்தில் திடசங்கற்பம் பூணுவோமாக.

நாடு வாழ ஏடு வாழ
நாமும் சிரித்து நலமுடன் வாழ
நாமகள் நல்லாசி தருவாளாக.

— ஜெய துர்க்கா —


WITH BEST COMPLIMENTS

FROM

**KARNAT TEXTILES**

184, Keyzer Street,

COLOMBO - 11.

Telephone: 2 4 7 4 2

# மதமில்லா வாழ்வேது?

-ஏகாம்பரம் ஆனந்த சிவகுமார்-

உளி இல்லா உருவம் ஏது? —நல்
உணர்வில்லா உண்மை ஏது?
துளி இல்லா வெள்ளம் ஏது? —மனத்
துயரில்லா துள்ளம் ஏது
ஒளி இல்லா இருள் ஏது? —இறை
ஒப்பில்லா உயர்வேது?
மிளிர் இல்லா மிடுக்கேது? —உயர்
மதமில்லா வாழ்வேது?.

அன்பில்லாப் பண்பு ஏது? —திகழ்
அறிவில்லா அழ கேது?
வான் இல்லா நில வேது? —நல்
கருத்தில்லாக் காவி யமேது?
அன்னையில்லாப் பாச மேது? —அவன்
அருளில்லா ஆனந்தமேது?
மேன்மை இல்லா மாண்பினர் ஏது? —உயர்
மதமில்லா வாழ்வேது?.

துடுப்பில்லாப் படகு ஏது? —மனத்
துணிவில்லா தீரம் ஏது?
காடு இல்லாக் களனி ஏது? —நல்
கொள்கை இல்லாக் குடி ஏது?
நடுநிலை இல்லா நீதி ஏது? —திகழ்
நன்மையில்லா சேவைகளேது?
மேடு இல்லாப் பள்ளம் ஏது? —உயர்
மதமில்லா வாழ்வேது?.

# இறைவா நீ!

-செ. சிவகுமாரன்-

என்றும் இருக்க உளங்கொண்டாய்!
இன்பத் தமிழுக் கிலக்கியமாய்,
இன்றும் இருத்தல் செய்கின்றாய்!
இறவா தமிழோ டிருப்பாய் நீ;
ஒன்றும் பொருளஃதின்ப மென
உணர்ந்தாய் தாயுமானவனே!
நின்றும் பரந்தும் மாத்திரமோ?
நில்லா இகத்தும் நிற்பாய் நீ.

*With best Compliment from*

# NOOR SONS

**IMPORTERS & EXPORTERS**

Dealers in All kinds of Radios, Fans, Wall Clocks,
Wrist Watches and Umbrellas.

11, CHINA LANE,
COLOMBO - 11.

T'phone: 33297

உ

நவராத்திரியின் பொருட்டு

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் நடாத்திய

கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவில் 1-ம் இடத்தைப் பெற்ற கட்டுரை

# சக்திக்கொரு வழிபாடாம் நவராத்திரி

( செல்வன். P. ஜெயசங்கர் $10T_1$ )

ஆற்றல் இல்லாமல் வாழ்வு இல்லை; வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வாழ்வுக்குத் தேவையான வலுவும் வனப்பும், வேறு பலவும் அமைதல் வேண்டும். இவையாவும் ஆற்றலால் அற்றலால் அமைகின்றன. ஆற்றலின் அதிதெய்வம் சக்தி. சக்தியின் அருள்தான் சகல முயற்சிகளும் என நம் மூதாதயர் கண்டனர். சகல முயற்சிகளுக்கும் தோன்றாத் துணையாக நிற்பதும் சக்திதான்.

அவளை அம்பிகை எனவும், தேவி எனவும், நாயகி எனவும் பல்லாயிரக்கணக்கான திருநாமங்களால் போற்றி வழிபடுவர். அகிலாண்ட நாயகியாகிய அவளின் அருள் இல்லையேல் இவ்வுலகில் எதுவுமே நடைபெறாது.

எமது வாழ்வில் வித்தையை விரும்புவோர், வெற்றியை விரும்புவோர், செல்வச்சிறப்பை விரும்புவோர், சுகத்தை விரும்புவோர் எனப் பல அபிலாஷைகளையுடையோர், தாம் தாம் விரும்பியவற்றைப் பெற்றுப் பயனடையத் தேவியைப் பூசித்து விழாவெடுப்பர். தேவியைப் பூசிப்பதற்கு முற்காலங்களில் சித்திரை, ஆடி, ஐப்பசி, மாசி ஆகிய மாதங்களில் விழாக்கள் நடைபெற்றன. புரட்டாதி மாதத்தில் அமாவாசையை அடுத்துவருகின்ற வளர்பிறைக் காலத்து வளர்கின்ற ஒன்பது தினங்களில் தேவியை வழிபடுகின்றோம். இவ்வொன்பது தினங்களிலும் இராப்பொழுதில் சிறப்பாக விழா நடைபெறுவதால் ஒன்பது இரவுகள் என்பதை 'நவராத்திரி' என்கிறோம்.

இந்நாட்களில் அஞ்ஞான இருளை நீக்கி, ஞான ஒளியைத் தருபவளாகிய ஞானம்பிகையை வழிபடுகின்றோம். அவளைப் பல வடிவங்களிலும் வணங்குகிறோம். அவள் பிரபஞ்சப் படைப்புகள் யாவற்றிலும் நிறைந்துள்ளாள் என்பதை விளக்குவதற்கு இந்நாட்களில் கொலு அமைக்கிறோம்.

அவளின் அற்புத லீலா விநோதங்களும், திருவருள் பாலிப்புகளும் எண்ணிறைந்தவை. அவற்றைச் சுருக்கமாக விளக்குவதற்கு இவ்வொன்பது தினங்களிலும் நடைபெறும் விழாவில் மலைமகள், அலைமகள், கலைமகள் என்னும் மூவரை முறையே வீரம், செல்வம், வித்தை என்பவற்றை விரும்பி வழிபடுவர். அன்னை பராசக்தியின் அன்பே வீரமாகவும், செல்வமாகவும், வித்தையாகவும் நமக்குக் கிடைக்கின்றன.

தீர்க்கமுடியாத அச்சத்தையும், துன்பத்தையும் தேவியே தீர்த்தருளினாள். முன்னொரு காலத்தில் மகிஷாசுரன் என்னும் அரக்கன் எல்லோரையும் துன்புறுத்தி வந்தபோது, தேவி அவனைவென்று துன்புறுத்தப்பட்டோர்க்கு வாழ்வளித்தாள். துன்பத்தைத் துடைத்து, அச்சத்தை நீக்கி, இன்பத்தையும் மகிழ்ச்சியையும், வாழ்வையும் அருளிச் செய்த தேவியை வழிபடும் விழாவாக நவராத்திரி அமைந்தது. இந்த ஒன்பது நாட்களிலும் வேறு எச்செயலுமின்றித் தேவியைச் சூக்குமமாக வழிபடுவர். பத்தாம் நாள் அவளைத் தூலமாக வழிபடுவர். அத்தினம் விஜயதசமி எனப்படும். அன்றுதான் விஜயனான அருச்சுனனுக்கு வெற்றி கிடைத்த நாளாகும். அதை மகா நோன்பு என்பர். அது உலகவழக்கில் மானம்பு என வழங்கிவருகிறது.

இயற்கையில் அமைந்துள்ள தெய்வ சைதன்யமான சக்தியைப் பூசிப்பது எமக்குவேண்டிய உபசரிப்புக்களைப் பெறும் பொருட்டேயாம். இந்த ஒன்பது நாள்களையும் 'கலை விழா' எனக் கொண்டாடுவது எமது கலாச்சாரமாகும். கலை எங்கள் உள்ளத்தில் பதிந்து உணர்வைக் கிளர்ச்சிபெறச் செய்யும் ஒரு திறமாகும். கடவுள் உணர்வே கலையின் உயிராகும்.

அன்புக்கும், அழகுக்கும், ஆற்றலுக்கும், பெண்ணுருவைக் கொள்ளுதல் பெருவழக்காகும். கலைகளைப் பெண்ணுருவாக்கி வழிபடுதல் எங்கள் நாகரிகம், பண்பாடு, மரபு.

இவ்விழா ஒன்பது இரவுகள் நடைபெறுவதால் நவராத்திரி என்றும், தேவியைக் குறித்துச் செய்வதால் தேவி பூசை என்றும், சரஸ்வதி பூசையுடன் முடிவடைவதால் சரஸ்வதி பூசை என்றும், இறுதியில் ஆயுதங்களைப் பூசிப்பதால் ஆயுதபூசை என்றும் வழங்கும்.

கலைவளம் காண்பதற்கு ஆற்றல், செல்வம், அறிவுடைமை ஆகிய மூன்றுந் தேவை. இவை மூன்றும் சேர்ந்த வழியிலேயே முதன்மையான வாழ்வு அமைகிறது.

நவராத்திரி விழாவில் முதல் மூன்று நாட்களிலும் துர்க்கை வழிபாடு நடைபெறுகிறது. வலிமைக்குத் துர்க்கை வழிபாடு அவசியம் என்பர். அவள் வலிமைக்கு அதி தெய்வம். துர்க்கையை வைணவி, விஜயை, சண்டிகை, மாதவீ, காளி முதலிய திருநாமங்களால் அர்ச்சிப்பர். அவள் மங்கல வடிவானவள்; கருணையுள்ளவள்.

நவராத்திரி விழாவில் நான்காம், ஐந்தாம், ஆறும் நாட்களில் இலட்சுமி பூசை செய்வர். சுதந்திரம், சுபீட்சம் என்பனவுக்கு அவளே அதி தேவதையாவள். இலட்சுமியைப் பூவின் திருவென்றும், அழகின் புனைகலம் என்றும், அமுதில் பிறந்தாள் என்றும் கூறுவர். அவள் மங்களங்களுக்கு உறைவிடமானவள்; அவளை மகாலட்சுமி எனவும் வழங்குவர்.

நவராத்திரி நாளில் ஒன்பதாம் இரவில் நடைபெறும் சரஸ்வதி பூசையை நாம் நன்கறிவோம். சரஸ்வதியை நாமகள், கலைமகள், பனுவலாட்டி என்றெல்லாம் போற்றுவர். அவள் நூல்களுக்கு உரியவளாதலால் பனுவலாட்டி என வணங்குவர்,

நாமகள் பளிங்கு போலும் தூய உருவினள். அவள் சாத்துவிக குணத்தை வளர்ப்பவள். ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் உணர்த்துபவள்.

*With best Compliments from*

# *A Well Wisher*

நவராத்திரியை ஒட்டி இந்து மாணவர் மன்றம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் கீழ்ப் பிரிவில் 1ம் இடத்தைப் பெற்ற கட்டுரை.

# சைவ சமயம்

கு. தயாபரன். 5T₁

இவ்வுலகத்தில் பல சமயங்கள் இருக்கின்றன. அவற்றுள் நமது நாட்டிலே நான்கு சமயங்கள் உண்டு. அவை சைவசமயம், புத்தசமயம், கிறிஸ்துசமயம், இஸ்லாம்சமயம்ஆகியனவாகும்.

அவற்றுள் சைவசமயம் எக்காலத்தில் உண்டானதென்பது எவராலும் சொல்லிக்கொள்ளுதல் இயலாது. இற்றைக்கு ஐயாயிரம் வருடங்களுக்கு முன் தமிழ் நாட்டில் இருந்தவர்கள் சைவசமயிகளாய் இருந்தார்கள். பல்லாயிரம் வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட இராமாயணம், பாரதம் முதலிய நூல்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. இராமபிரான், பாண்டவர்கள் முதலியோர் சைவ மயிகளே. இலங்கை வேந்தனுன இராவணன் ஒரு சிவ பக்தன். இதனை திருஞான சம்பந்த சுவாமிகள் கூறியருளிய தேவாரத்தில் காணலாம். 'இராவணன் மேலது நீறு' என்பது அத் தேவாரத்தின் முதலடியாகும். ஆதலால் சைவசமயம் சரித்திர காலத்திற்கு அப்பாற்பட்டதென்பது நன்கு தெளிவாகும்.

புத்த மதம் கௌதம புத்தரால் வட இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டது. கிறிஸ்து சமயம் கிறிஸ்த்து என்பவரால் பலஸ்தீன நாட்டில் ஆரம்பிக்கப்பட் டது. இஸ்லாம் சமயம் முகமது என்பவரால் அரேபியாவில் தொடக்கப்பட்டது.

சைவசமயம் என்பது சிவத்தை அடையச் செய்யும் சமயம் எனப் பொருள் படும். சிவம் என்பது கடவுள். சைவசமயம் மற்றைய எல்லாச் சமயங்களிலும் மிக மேலானது. சைவசமய நெறிப்படி நடப்பவர்கள் தவருது இறைவனை அடை வார்கள். சைவசமயம் எல்லாஅறங்களையும் கூறுகிறது. எச்சமயத்தவராயினும் நமது சமயக்கடவுளை வழிபடும்போது அவ்வழிபாட்டை எமது கடவுள் ஏற்று அருள் புரிவார் என்று சொல்வது சைவசமயம் மாத்திரமே. மோட்சம் அடை வதற்கு சாதாரணமாகச் சமய நெறியைப் படிப்படியாக நிரைப்படுத்தி உள் ளது, சைவசமயம் ஒன்றேயாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன அவை. மற்றைய சமயங்களில் இவ்வாறுன படிகள் இல்லை. எல்லாவிதமான தீமைகளையும் விலக்குவது சைவ சமயம்மாத்திரமே. கொலை, களவு, கள்ளுண் ணல், புலாலுண்ணல் முதலிய பாதகங்களைச் சைவசமயம்கண்டித்து விலக்குகின் றது. சைவசமயமே சமயம் என்பது ஞானிகளின் வாக்கு. நம்மைப் பிறவித் துன்பத்தினின்றும் நீக்கிக் கடவுளோடு சேர்க்கத்தக்கது, சைவசமயம் ஒன்றே ஆதலால் நாம் ஒவ்வொருவரும் சைவசமய நெறிப்படி ஒழுகி வருவோமாக.

With the Compliments

of

HAYLEYS LIMITED.

நவராத்திரியின் காரணமாக
ஹேரயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் நடாத்திய
கட்டுரை போட்டியில் மேல் பிரிவில் 2ம் இடம் பெற்ற கட்டுரை.

# அந்தாதி பாடிய அபிராமி பட்டர்

-நடராஜன் ஜனகன்.

அந்தர வானிலே நூறுகயிறு கட்டப்பட்ட ஒரு திறந்தவெளி. நூறு கயிறுகளும் மத்தியில் இணைக்கப்பட்டு அக்கினிக்கொழுந்தினுல் வருடப்பட்ட வெம்மையெனும் வேதனையுணர்ந்து முறுக்கேறிக் கொண்டிருக்கின்றன. இவ்வரங்கைச் சுற்றி மக்கள்கூட்டம் நிஷ்தரங்க சமுத்திரமாகக் குவிந்து நிற்கிறது. கயிற்றினிலே ஒரு மெல்லிய உருவம் பூணூலணிந்து விபூதிதரித்து இசை முரசம் முழங்குகிறது.

''கார் அமர் கொன்றையும்
சண்பக மாலையும் சாத்தும் தில்லை
ஊரர் தம் பாகத்து உமை
மைந்தனே உலகேழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி
எப்போதும் என் சிந்தையுள்ளே
கார் அமர் மேனிக் கணபதியே
நிற்கக் கட்டுரையே''.

எனும் அடிகளில் விக்கினங்களைத் தீர்க்கும் விக்கினேஸ்வரனுக்குக் காப்புப் பாடுகிறது அவ்வுரு. அவ்வாசாரியார்தான் அன்னை அபிராமியின் அருட்கடாட்சம் பெற்ற சுப்பிரமணிய ஐயர்.

காவிரி நதியின் கண்ணே வளமுற அமைந்திருக்கும் திருக்கடவூர்த் திருத்தலத்திலே வழிவழியாகச் சைவ ஆசாரங்களிலே நின்று ஒழுகிவந்த சிவாசாரியாராக அமிர்தலிங்க ஐயருக்கு இற்றைக்கு ஏறக்குறைய இருநூற்றெழுபது ஆண்டுகளுக்கு முன்னர் அவதரித்தவர் சுப்பிரமணிய ஐயர். தன்திறமையிலேயே தமிழ் மொழி, வடமொழி ஆகிய இருமொழித் தேர்ச்சி பெற்ருர் சுப்பிரமணியர். அவர் அதனுடன் அமையாது ஆசாரியர்களின் உயர்நாதமாகிய இசைஞானத்தில் பெரும் தேர்ச்சி பெற்ருர். அத்துடன் பண்டைத் தமிழ்ப் பண்பாட்டின் வழிநின்றவராதலால் மாதரைத் தெய்வமாக வழிபட்டு அவர்களில் அன்னை அபிராமியைக் காணும் ஒழுக்கசீலராய்த் திகழ்ந்தார். ஐயர் மேலும் தமதூரிலே கோயில் கொண்டருளியிருக்கும் அபிராமி அம்பிகை மீது தீராத பக்தியுடையவர் என்றும் அம்பிகையின் அருளொளியில் மூழ்கித் தன்னை மறந்து தியானத்தில் வீற்றிருப்பார்.

மன்னன் சரபோஜி தனது குடிகளிடத்தில் மாருப் பேரன்பு கொண்டவன்; தன்குடிகளிடம் எவர் தவறுதலாக நடப்பினும் அவர்களுக்குக் கொடுந்தண்டனை விதிப்பவன். அவனிடம் சிலர் சுப்பிரமணியர் பெண்களை வணங்குவதைப் பற்றித் தவருகக் கூறினர். அதனை அறியும் பொருட்டு மன்னன் சரபோஜி ஒரு தை அமாவாசை தினத்தன்று காவிரியிலே நீராடிவிட்டுக் கோயிற் தரிசனம் செய்ய வந்தான். அங்கே அம்பிகையின் மூலஸ்தானத்திலே முற்றுந் துறந்த நிலையிலே பூரண சந்திரத் தேஜஸுடைய ஒருவர் தியானத்திலமர்ந்திருப்பதைக் கண்டு, அவரிடம் சென்று ''ஐயா பெரியவரே! இன்று எத்தனை மணிக்கு அமாவாசை ஆரம்பம் என்று கேட்டான். கற்பூர ஒளியினிலே செஞ்சாந்துத் திலகமணிந்த அன்னையின் அருளென்னும் வெள்ளத்திற் திளைத்து நின்ற சுப்பிரமணியருக்கு எங்கும் அம்பிகையின் ஒளிகனலும் முகமே தென்பட்டது. அதனுலே அவர் வாயினின்றும் ''இன்று பூரணை நிலவல்லவோ!'' எனும் வசனமே வெளிப்பட்டது. மன்

னும் நீங்கினன். ம(ா)க்களும் மகிழ்ந்தனர். மன்னனின் காலக் கெடுவைகோயில் பூசகர் வாயிலாக உணர்ந்த சுப்பிரமணியர் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யும் அன்னையின் பதம் பணிந்து அந்தாதி பாடினுர். முடிவு, அன்றிரவு அம்பிகையின் அருட்கடாட்சத்தால் பூரணை நிலவு வைகை நதியிற்பட்டுத் தெறித்தது. சுப்பிரமணியரும் அபிராமி பட்டரானுர்.

அந்தாதி என்பது ஒரு பாடலின் அந்தமான பதத்தை அடுத்த பாடலின் ஆதியாய்க் கொண்டு பாடல் பாடுவதாகும். அபிராமிபட்டர் இயற்றிய அபிராமி அந்தாதி இவ்வாறு நூறு பாடல் களைக் கொண்ட சரமாலையாகத் திகழ்கின்றது. அபிராமி அந்தாதி பக்திரசம் ததும்பும் சுத்தச் செந்தமிழ் நூல்; தமிழ் மொழி உள்ளளவும் அழியாப்புகழுடை அமர நூலாகத் திகழும் தன் மையது; அது காலத்தால் வாடாது; கற்பதனுற் புளியாது; ஒருகால் கண்ட புதுமை தோற்க மறுகால் வேறொரு புதுமையைக் காட்டும் மந்திர நூல்; எவர் மனதையும் இலகுவிற் தன்பால் இழுக்கக் கூடியது. ஏனெனில், இந்நூற் களஞ்சியத்துட் பொதிந்துகிடக்கும் கருத்துக்கள் எவ ரையும் கவரும் காந்தம் போன்றன.

இத்தகு சிறப்புடை அபிராமி அந்தாதியிலே பட்டர், அம்பிகையை எண்ணற்ற நாமங்களாற் போற்றுகிறுர். சுந்தரி, அம்பிகை, கன்னி, காளி, சங்கரி சண்டி, சாமளை, சுந்தரி, சூலினி நாயகி, திரிபுரை, நாராயணி, நான்முகி, பயிரவி, பராசக்தி, பராபரை, மனோன்மணி, மாதங்கி, மாலினி முதலியன அவற்றுட் சில. இவ்வமர நூலிலே நாம் அறிய வேண்டிய உண்மைகள் பல உள. அபிராமிபட்டர் அந்தாதி வாயிலாக எமக்கு எடுத்துக்காட்டும் சிறந்த, பொருள் பொதிந்த கருத்துக்கள் பலப்பல,

''கொள்ளேன் மனதில் நின்கோலம் அல்
லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன்''

முதலிய மக்களின் சிந்தனையைத் தட்டி எழுப்புகின்ற அடிகள் பல. அன்னையைப் போற்றும் அபிராமிபட்டர்,

தனந்தரும் கல்விதரும் ஒரு
நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந்
தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனந்தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபி
ராமி கடைக் கண்களே.

என்று அபிராமி அன்னையின் பதம் பணிந்தால் வாழ்க்கைக்கு வேண்டிய சகல நன்மைகளும் கிட்டும் என்கிறுர். அத்துடன் நிற்கவில்லை பட்டர். அவர் மேலும் தொடர்கிறுர். அருளுரு வான அன்னையைத் தொழாதிருப்போமாயின்,

''தோத்திரம் செய்து தொழுமின்
போலும் நின் தோற்றமொரு
மாத்திரைப் போதும் மனதில் வை
யாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றி
நாளும் குழல்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ
லா நிற்பர் பாரெங்குமே''

என்று அதனுல் வரக்கூடிய தீமைகளே, கொடுமைகளேக் கூறுகின்ருர் அவர். இத்தகு அபிராமி அந்தாதி மக்களே நல்வழிப்படுத்தும் ஒரு சிறந்த சாதனமாகத் திகழ்ந்து அக்காலத்திற்கும் இக் காலத்திற்கும் எக்காலத்திற்குமேற்ற புதுப்பொலிவுடன் திகழ்வதை நாம் காணலாம். மேலும் அபிராமி பட்டர் தனதுயிரைக் காத்த அபிராமித்தாயைப் போற்றி ''அபிராமி பதிகம்'' எனும் பெயரில் மேலும் இரு நூல்களேச் செய்துள்ளார்.

இவ்வாறு அபிராமி பட்டர் தனது அபிராமி அந்தாதியினுல் எமக்குப் புரியவைக்கும் கருத் துக்கள் பலப் பல. தலேபோகும் நேரத்திற் தன்னுயிரையே காப்பாற்றித் தரணியிலே புகழைத் தேடித்தந்த,

''ஆத்தாளே எங்கள் அபிராம
வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளே மாதுளம்பூ
நிறத்தாளேப் புவியடங்கக்
காத்தாளே அங்குச பாசங்குசமும்
கரும்பும் அங்கை
சேர்த்தாளே முக்கண்ணியைத்
தொழுவார்க்கொரு தீங்கில்லேயே''.

என்று போற்றித் தொழுகின்ருர். அவ்வாறே பதம் பணிவோர்க்குப் பயனளிக்கும் அபிராமித் தாயை நாமும் போற்றிப் பணிந்து நல்லன கற்று, நற்குணம் பெற்று, நற்குடியாகி நலம் பெறுவோமாக.

★

சுத்தமான 22 கரட் தங்க நகைகளுக்கு

விஜயம் செய்யுங்கள்

Shyamala Jewellers

104, Sea Street,

COLOMBO - 11.

With best Compliments

from

# HEMAS GROUP OF COMPANIES

Hemas Building,

No. 36, BRISTOL STREET,

COLOMBO - 1.

# அம்மன் அருள்

மாநகர் மதுரையில் முகுந்தன்றன் சோதரி
மானிலம் மகிழ்ந்திட மல்லிகை சூடிக்
கோநகர் மன்னன் மடியில்வந் தமர்ந்து குமர
குருபரன் நெஞ்சத்தில் ஞானத்தைக் காட்டினுள்
தேனமர் சோலைசூழ் சீர்காழித் தலத்தினில்
தேடிய திருஞான சம்பந்தக் குழந்தைக்கு
வானமர் முகினடுவே ஈசனேடு வந்து
வாழ்த்தியே மெய்ஞானப் பாலை ஊட்டினுள்

கல்வியறி வில்லாத சேயாம்காளி தாசனுக்குக்
கவித்துவமும் உலகோர் போற்றும் வித்தையும்
சொல்வித்த இறைவி மகாகவி கம்பனுக்குச்
சொல்நயமும் நாநயமும் அருளி வைத்தாள்

நல்வித்தை தெரியாக் கௌரவரை அடக்க
நல்வழி எனும் உயரிய வீரத்தையும்
வில்வித்தை தெரிந்த வீரராம் பாண்டவர்க்கு
வெற்றி பெற நல்வீரமும் பெற்றுத்தந்தாள்

கடவூர்ப் பதியிலே செங்கரும்பாய்த் திகழ்ந்து
நடேசுரரின் அன்பிலே திகழ்ந்த அவளை
தடங்கல் இலாதே வந்தித்த பட்டனுக்குத்
தண்ணிலவை வானில் பூரணையாய்த் தந்தாள்
மடமெனும் குணந்தனை உடைய வல்லி
மகிழ்ந்து வந்திருக்கும் நவராத்திரி தினத்தில்
திடமுள்ள மனத்துடன் எங்கும் இல்லாத
திகழ்மணி பூண்ட தேவியைத் தொழுவோம்.

— சிவசங்கர். சிவசுப்பிரமணியம் —


HAPPY WISHES TO THE

NAVARATHIRI POOSAI

P. ARUNACHALAM & Co.

**Importers of Electrical & Engineering Goods**

62/5, 37th Lane, COLOMBO-6.

WITH BEST COMPLIMENTS

FROM

# NEW COLOMBO STORES

Wholesale & Retail Dealers in:

Groceries, Oilman Goods, Electrical Goods, Paper Stationery, Aluminium Ware, Eversilver Ware, Glass Ware. Enamel Ware, Plastic Goods, Fancy Goods and Eggs.

241, 243, GALLE ROAD, WELLAWATTA.

Telephone: 84788 (Free Delivery)

Any thing in

**STEEL**

then its.

# United Hardware Stores

**Importers of B. I. Nuts, Roofing Bolts, Nuts & Copper Taps.**

346, OLD MOOR STREET,
COLOMBO - 12.

Telephone: 32445

நவராத்திரியின் காரணமாக
றேயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் நடாத்திய
கட்டுரை போட்டியில் மத்திய பிரிவில் 2ம் இடம் பெற்ற கட்டுரை.

# ★★★ சக்தி வழிபாடு ★★★

செல்வன் சி. சிவசங்கர், 8 $T_2$

அன்புக்கும், பண்புக்கும் அடைக்கலம் பெண்ணேயாகும். பெண்ணே தாய். தாயே சக்தி. சிவபிரானின் அருளாற்றலே சக்தி எனப்படுகிறது. பூவின் மணமாகவும், வசந்தந்தின் இனிமையாகவும், பனியின் குளிராகவும் விளங்குவது சக்தியேயாகும்.

''மணியே மணியின் ஒளியே ஒளியின் அணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியே னுனதிரு பத்மபாதம் பணிந்த பின்னே''

என அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியில் குறிப்பிடுகிறூர். மகாசக்தியின் தோற்றத்திலிருந்து குரோயத்திரி, ஜனனி, ஆரணி எனும் சக்திகள் தோன்றுகின்றனர். இவர்களே பிரம்மாவின் படைத்தல் தொழிலுக்கு உறுதுணையாக பிராஹ்மி என்றும், விஷ்ணுவின் காத்தல் தொழிலைச் சரிவரச் செய்ய வைஷ்ணவியாயும் மகேசுவரனின் அழித்தல் தொழிலுக்கு உதவி செய்ய மகேசுவரியாகவும் தோன்றுகின்றனர், இதை அபிராமிப்பட்டர்,

''பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்த வண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே'' என்கிறூர்.

இச் சக்தி இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானு சக்தி எனத் தோன்றும் இடத்தில் முறையே ஏகாம்பரநாதனின் சக்தியான காஞ்சி காமாட்சியாகவும், சொக்கநாதரின் சக்தியான மீனாட்சியாகவும், விஸ்வநாதரின் சக்தியான விசாலாட்சியாகவும் தோன்றுகிறூள் எனச் சில ஐதீகங்கள் இருக்கின்றன.

''சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'' என்கிறூர் சைவசித்தாந்தப் பேரறிஞர் உமாபதி சிவாச்சாரியார். இன்னும் சிவபிரானின் அறுபத்து நான்கு முகூர்த்தங்களில் ஒன்றான அர்த்த நாரீஸ்வரர் சுருபத்தில் சக்தி பாதியாய் இருப்பதைக் காண்கிறேம்.

சக்தியை வழிபட்டோர் பலர் என்பது உண்மை. வேதகாலத்திற்கு முன்னே சக்தி வழிபாடு இடம் பெற்றது என்பதை நாம் இன்றும் காண்கிறேம். கல்வி, செல்வம், வீரம் மூன்றிற்கும் தெய்வங்களாகச் சக்தியை வைத்திருப்பது எம் மரபு. சக்தி துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி என்று பிரியும் போது அவளை வேறு வேறு கோணங்களில் வைக்கிறேம். அபிராமிப்பட்டர் தனது பாடல் ஒன்றில் ''தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா இனம் தரும் தனக்கு அடியார்க்கே'' என்கிறூர். இது துர்க்கையின் வீரமும், லக்குமியின் தனமும், சரஸ்வதியின் கல்வியையும் குறிக்கும்.

## துர்க்கை.

நாராயணரின் சகோதரியாதலால் நாராயணி என்றும், சிவனின் சக்தியாதலால் சிவ சக்தி என்றும், சிங்கத்தில் வீற்றிருப்பதால் சிம்மவாஹினி என்றும் குறிக்கப்படுகிறூள். நீலமேனி கொண்டவள் இவள். இவளையே காளி, பவானி, உமை, பார்வதி என்றும் அழைக்கின்றேம்.

## லக்ஷ்மி.

சிவந்த மேனி கொண்ட இவள் அபயவரத முத்திரைகளைத் தாங்கியதோடு பதும கலசங்களோடு கூடி நிற்பாள். இவள் நாராயணரின் மார்பில் என்றும் வீற்றிருப்பாள். பாற்கட

லேக் கடையும்போது தோன்றியதால் அலைமகள் என்றும் அழைக்கப்படுகிறுள். ஆயிரம் இதழ் களுடன் கூடிய செந்தாமரையில் வீற்றிருப்பாள். இவளே சீதை, ருக்குமணி, வேதவதி என்று அழைக்கப்படுபவளாவாள்.

சரஸ்வதி.

வெள்ளைக் கமலத்தில் அல்லது ஹம்சத்தில் வீற்றிருக்கும் இவள் தூய்மையே வடிவானவள் நான்கு வேதங்களைத் திருக்கரங்களாகவும், சங்கீத சாகித்தியங்களை இரு தனங்களாகக் கொண்டவள். கலை வடிவானவள். தனது திருக்கரங்களில் வீணை, ஜெபமாலை, புத்தகம் முதலியவற்றை ஏந்தியிருப்பாள். பிரம்மனின் பத்தினி ஆதலால் பிராஹ்மி என்று அழைக்கப்படுகிறுள். நதிகள் போலே விரைவாக அருளைப் பாய்ச்சுவதால் சரஸ்வதி எனப்படுகிறுள். வாக்கிற்குத் தேவியாதலால் வாணி என்றும், கலைகளுக்கு அரசியாதலால் கலைமகள் என்றும் அழைக்கப்படுகிறுள். இவளைக் கம்பர்,

''ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாரதிடர்''

என்று பாடுகிறுர்.

காளமேகப் புலவர் அரசவைக்கு வரும்போது அவருக்கு ஆசனம் கிடைக்கவில்லை. அதனுல் சரஸ்வதிதேவியைப் பணிய ஆசனம் கிடைத்தது. அந் நினைவால்,

''வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடு என்னைச்
சரியாசனம் வைத்த தாய்'' என்கிறுர்.

மூடனுகவிருந்த காளிதாசனுக்கு நல் அறிவை வழங்கியவளும் சக்தியே. சங்கரர் தனது சௌந்தர்யலஹரியில அம்மனுக்கு அபயவரத கரங்கள் இல்லை என்கிறுர். ஏனென்ருல் அபயகரமளிக்காமலே அருள் தருபவள் சக்தி ஆதலாலேயே இப்படிக் கூறுகிறுர். இது பிள்ளை கேட்கமுதலேயே தாய் உதவி செய்வதைப்போல் இருக்கிறதல்லவா.

ஆச்சார்ய சுவாமிகள் அம்பிகையின் பக்தர். இவர் தனது சௌந்தர்யலஹரியை இயற்றி அரைவாசியில் நான் அம்பிகையை பாடுவது சூரியனுக்குத் தீபாராதனை காட்டுவதற்குச் சமம் என்கிறுர்.

தேவியை வழிபட்டவர்களுள் சிறந்தவர் அபிராமி பட்டரேயாவர். தனது அபிராமி அந்தாதியில் தேவியின் சிறப்பை தேவியே சொல்லி தேவியே எழுதினுர் என்கிறுர்.

அம்பிகையின் அருளே மனிதர் வாழ்வை மேம்படுத்த உதவுகிறது. அம்பிகையின் விரதங்கள் பல. அவைகளில் சில ஆடிப்பூரம், வரலக்ஷ்மி விரதம், கேதாரகௌரி விரதம், நவராத்திரி என்பவையாகும். நவராத்திரி சகல மதத்தினரும் அனுட்டிக்கும் நோன்பாகும். இக் கருத்து, ''வந்திப்பவர் உனை வானவர், தானவர் மானிடரும்'' என்று அபிராமி அந்தாதியில் விளக்கப்படுகிறது. சக்தியே வாழ்வின் முதற்படி. சக்தியை வழிபடும் அடியவர்க்கு அச் சக்தி சிறந்த வரங்களைத் தருவாள். ராகங்கள், நதிகள் முதலியவை எல்லாம் சக்தியின் திருநாமத்தைக் கொண்டு உள்ளன.

இந்தியாவில் சக்தி வழிபாடு மிகப் பரந்துள்ளது. வங்காளத்தில் சக்தி வழிபாடு இருந்ததற்கு இராமகிருஷ்ணர் வரலாறு சான்று பகர்கிறது. குமரிமுனையில் கன்னியாகுமரியாக தேவி விளங்குகிறுள். நவராத்திரி நாயகி சகலருக்கும் கல்வி, செல்வம், வீரம் முதலியவற்றை வழங்கட்டும்.

''ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெலாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்குசபாசாங்குசமும் கரும்பும் கங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே''

# நாமகள் வெண்பா மாலை

-க. சுதர்சனன்-

1. பன்னும் பனுவற் பயன்றேர் அறிஞருளம்
நண்ணும் கலைமடந்தை நாவிலுளாள் — எண்ணில்
அரும்பவிழும் தாமரையும் அன்பர் உளமும்
விரும்பி யவள்வாழ் இடம்.

2. வெள்ளைக் கலையுடுப்பள் வீணைத் தொனியிருப்பள்
உள்ளத் தொளியாய் ஒளிர்ந்திடுவள் — தெள்ளும்
கலைதேர் அறிஞர் கவிமழைகண் டென்றுங்
களிகூர் கலாப மயில்.

3. கலைசேர் வடிவாய்க் கனிந்திருப்பள் வெள்ளைக்
கலைசேர் இடையாள்தான் கண்டாய் — அலைசூழ்
நிலவுலக மன்னர் நிலைகீழாப் பாடும்
புலவர் புகழ் மேலாப் புரிந்து.

4. சின்னஞ் சிறுவர் நிதஞ் சிந்தும் மழலைமொழி
தன்னின் மிளிரும் தமிழ்ச்செல்வி — மின்னின்
ஒளிரும் பொருளின் ஒளியாகி நிற்பள்
தளிரின் மலர்ப்பதத்தெம் தாய்.

5. கல்விக் கரசி கலைச் செல்வி கானமழை
பல்கிப் பொழியப் பதந்தொடுப்பள் — சொல்லின்
உழும் உழுவர் நாவில் உவந்திருக்கும் அன்னை
தொழும் அடியார்க் குற்ற துணை.


With the best Compliments from

**Elaan Garments Manufactures**

350, Grandpass Road,
COLOMBO-14.

Phone: 28794

*With best Compliments*

*from*

# RAJAH CORPORATION

IMPORTORS & GENERAL MERCHANTS

60, Dam Street, Colombo - 12.

Telephone; 34525 T'grams: 'GREEN WATER'

Branches: VAVUNIYA,
KILINOCHCHI,
JAFFNA (T.P. 7575)



# சிவசக்தி

உலகம் சுடிதாய்ச் சுழல்கிறது - அதில்
இயற்கை தாண்டவமிடுகிறது
புலம் வெளியெல்லாம் பயிர் ஓங்கிறது - விண்
பிளந்து கிடுக்க மழை பொழிகிறது
நிலமே பெயரவளி சுழல்கிறது – பயிர்
நலமே செழித்து மிளிர்கிறது
உலகை இயக்குமிப் பெருஞ் சக்தியே - உல
கேத்தும் முதலாம் சிவசக்தி!

வெளியினில் உலகு தோன்றியது – அங்கே
வளத் தோடுயிர்களும் பெருகியது
பொலிந்த பசுமை உலகினையே - பஞ்ச
பூதங்கள் மறைந்தே இயக்கியது
ஒளியை இறைத்த செங்கதிரவனும் - தண்
ணொளியைப் பொழிந்த வெண்மதியும்
மிளிரத் தெய்வ வடிவிருந்த - பாரி
மெய்மைச் சக்தியே சிவசக்தி!

( வேறு )

சக்தியே வடிவான அன்னையின் நாமம்
சகத்தில் விளக்கப் பாரோர் பரவ
பக்தியோடு நாம் ஏத்தும் நன்னாள் - அன்னை
பராசக்தியின் சீர்நவ ராத்திரி.

- மூ. சாரங்கன் -

# நான் போற்றுகிறேன்

வெள்ளைக் கலையுடுத்து அவள் வந்தாள்
வேட்கை தணிந்திட அருள் தந்தாள்
வீட்டில் இருந்து நான் பாடினாலும்
பாட்டில் அவள் புகழைப் பாடிடுவேன்
உள்ளக் கமலத்தில் அவள் இருந்தால்
உலகை மயக்கும் அருள் தந்தாள்
தட்டில் பழங்கள் வைத்து வணங்கினாலும்
பாட்டில் அவள் புகழை பாடிடுவேன்.

இனிமை என்றிங்கு காமன் அம்பெய்த
தனிமை தராத இன்பம் தருவீணையெனும்
தேனிதை என்றுமேத்தி வழிபட இங்கு
மனிதர் யாருமில்லை என்று மலர் பாடிட
கவிதை நானெழுத அருள் தந்த
வனிதை அவளை நான் போற்றுகிறேன்
புனிதை அவள் நெஞ்சம் மகிழ்ந்திடவே
பூரிகையுடன் நான் பாடுகிறேன்.

-சி. விபுலானந்தா-

*With Compliments*

*from*

# *Waterman Steamship Corporation*

FAST, DIRECT, SHIPPING SERVICE TO U. S. A.

Local Agents

## AITKEN SPENCE & CO., LTD.

13, Sir Baron Jayatilleke Mawatha,

COLOMBO – 1.

With best Compliments

from

# M/s. TAJA LIMITED.

64 1/8, DAM STREET,

COLOMBO - 12.

Cable: 'TAJALIMIT' Phone: 21421

*With the best Compliments*

*of*

**LEVER BROTHERS (CEYLON) LIMITED.**

For all your

**Building Materials**

**and**

**Sanitaryware**

VISIT

# RAMSONS HARDWARE ENTERPRISES LTD.

443, OLD MOOR STREET,

COLOMBO - 12.

T'phone: 31511 Telegrams: RAMSONS

WITH BEST COMPLIMENTS

FROM

# NALLUR TRADERS

**COMMISSION AGENTS FOR LOCAL PRODUCES**

49. Fourth Cross Street,

COLOMBO - 11.

Dealers of Chillies, Potatoes, Jaggery and other Local Produces

Telephone: 3 3 9 9 1

T'grams: 'PONVILA'

**WITH BEST COMPLIMENTS FROM**

# Vithiya Trading Company

49/10, Iceland Building.

GALLE FACE,

COLOMBO - 3.

Telephone: 24064

# நாவலர் சைவத்தின் காவலர்

தமிழ் வாழச் சைவம் வாழ அவதரித்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான். சைவத்திற்கு சோதனைக் காலம் ஏற்பட்டபொழுது அதற்கு நேர்ந்த இடுக்கண் நீக்கி அதனைக் காப்பாற்றியவர். வசன நடை என்றால் இஃது என்று எழுதிக் காட்டி தமிழிலே குறியீடுகளைப் புகுத்தியவர். ஒரு பரசமயக் கோளரி அஞ்சா நெஞ்சம் படைத்த விறல் வீரர். ஆண்டவனருளில் திளைத்து அரும்பணி புரிந்தவர். தமது பெரும் பணிகளால், தியாகத்தால், ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை மேம்பாட்டால், இன்ன பிறவற்றால் சைவத்தையும் தமிழையும் பாதுகாத்த பெருமான். சமய குரவர் நால்வருக்கும் பின்னர் சைவமும் தமிழும் வளர்த்த பெருந்தகை. அது குறித்து சிவசம்புப் புலவர் பாடுகிறார்.

ஆரூரனில்லைப் புகலியர் கோனில்லை அப்பனில்லைச்
சீருரு மாணிக்க வாசகனில்லைத் திசையளந்த
பேருரு மாறுமுக நாவலனில்லைப் 'பின்னிங்குயார்
நீருரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கும் நீர்மையரே.

நாவலர் பெருமான் தமது பத்தொன்பதாவது வயதில் பரமதமாகிய கிருஸ்து சமயம் பரவுதலையும் சிவமதமாகிய சைவம் குன்றுதலையும் கண்டார். கண்டமாத்திரத்தே சைவ சாத்திரம் படித்தலிலும் அதிக கவனத்தைச் செலுத்தி பல நூல்களைச் சந்தேகமறக் கற்றுணர்ந்தார். அத்துடன் நில்லாது தாம் கற்றுணர்ந்தவற்றை அறியாதவர்களுக்கு எடுத்தியம்பினார்.

நாவலர் பெருமான் இளைஞராக இருந்த காலத்திலே கிறிஸ்தவ மிஷனரிமார்கள் பல பாடசாலைகளை நிறுவி அதில் கல்வி கற்ற மாணுக்கர்களுக்கு கிறிஸ்தவ சமயம் பற்றிப் போதித்து அந்தப் பிஞ்சு உள்ளங்களிலே நஞ்சை ஊட்டி வந்தனர். அதைக் கண்ணுற்ற நாவலர், மனவிசனப்பட்டு சைவசமயத்தைப் பரப்புவதற்குத் திட்டஞ் செய்து அதற்குரிய வழிவகைகளைக் கையாளத் தொடங்கினார்.

முதலிலே கருவிநூல்களையும், சமயநூல்களையும் சில பிள்ளைகளுக்குக் கற்பித்தால் அவர்களால் சைவ உலகிற்கு நன்மை ஏற்படுவதுடன் அவர்கள் மதமாற்றம் செய்யப்படாதிருக்கவும் உதவுமென எண்ணி காலையும் மாலையும் பாடசாலை ஒன்றினைத் தொடங்கி வேதனம் பெறாது கல்வியறிவு பெற்றவர்கள் பின்னாலே நாவலர் மாணவ பரம்பரை ஒன்றினைச் சிருட்டித்து வேறு பலருக்கும் கல்வி கற்பித்தனர். இவ்வாறு பெருந்தொகையான மாணுக்கர் சைவக்கல்வி பெற்று மதமாற்றக் கொடுமையினின்றும் தப்பினார்கள்.

மதமாற்றத்தின் பொருட்டு ஞான ஸ்நானம் பெறுவதற்குத் தயாராயிருந்த நூற்றுக் கணக்கானவர்களை நேரிற் சந்தித்து சைவ மதம் பற்றியும் அதன் தொன்மை, சித்தாந்தம் பற்றியும் தெளிவாக எடுத்தியம்பி அவர்களது மனத்தை மாற்றி மத மாற்றக் குழிக்குள் வீழ்ந்திடாது செய்தார். இத்தகையோரிற் பெரும்பாலானவர்கள் உபாத்தியாயர்கள் என்பதையும் அவர்கள் மதம் மாறி கிறிஸ்துவ மதப்பிரசாரம் செய்திருந்தால் என்ன விளைவு ஏற்பட்டிருக்கும் எள்பதையும் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

நாவலர் பெருமான் அநேகர் சற்சமயமாகிய சைவசமயத்தினின்றுங் கிறிஸ்து சமயத்திலே பிரவேசிப்பதற்குக் காரணம் சைவ சமயத்து உண்மையை அறியாமையினால் என்று உணர்ந்தார். சைவசமய உண்மையை உரைப்பதற்கு பிரசங்கஞ் செய்வதே சிறந்ததென்று எண்ணிச் சைவக் கோயில்களிலே பிரசங்கமண்டபம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்றும் பிரசங்கம் செய்ய கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த பிரசாரகர்கள் காலத்துக்குக் காலம் நியமிக்கப்படல் வேண்டு

மென்றும் கூறினர். அதனுடன் நிற்காது சைவப் பிரசங்கஞ் செய்தற்கு முயன்று வண்ணர்பண்ணை வைத்திலிங்கம் செட்டியாரால் கட்டுவிக்கப்பட்ட வைத்தீஸ்வரன் கோயில் வசந்த மண்டபத்திலே 1847, மார்கழி மாதம் 31ம் நாள் சைவமெனுஞ் செஞ்சாலி வளர்த்தற் பொருட்டு பிரசங்க மென்னும் மழையைப் பொழிந்தார் அத்துடன் நிற்காது தம்முடன் படித்த வேறுபல நண்பர் களையும்கொண்டு பிரசங்கஞ் செய்வித்தார். இதனுல் ஏற்பட்ட பயன் சொல்லுந்தரமன்று இவரது பிரசங்கங்களைக் கேட்டு அநேகர் மது, மாமிசம் முதலியவற்றைக் கைவிட்டார்கள் ஆலய தரிசனத் தையே அறியாதவர்கள் நியமமாகத் தரிசனஞ் செய்யத் தொடங்கினுர்கள் சைவசித்தாந்தங்கள் உண்மையானவை என்று விசுவாசிக்கத் தொடங்கினுர்கள்.

கிறிஸ்தவர்களால் தாபிக்கப்பட்ட பாடசாலைகளிலே கருவி சமய நூல்கள் கற்பிக்கப்படுதலை யும் தமது பாடசாலையிலே கருவி நூல் மட்டுமே கற்பித்தலையும் கண்ட நாவலர் தமது பாட சாலையிலும் இருவகை நூல்களையும் கற்பிக்கத் தொடங்கினர். இவ்வாறு இருக்குங்காலை சமய அறிவை ஊட்டக் கூடிய நூல்கள் இல்லாமையையும் இருந்த சிலவும் அச்சுப்பிழை, சொற்பிழை வசனப் பிழைகள் மிகுந்திருந்ததையும் கண்டு பல கிடைத்தற்கரிய ஒட்டுப் பிரதி நூல்களைத் தேடி எடுத்து மிக்க சிரமத்துடன் அவற்றைப் பரிசோதித்து வெளியிட எண்ணினர். இதற்கு ஒரு அச்சு இயந்திரசாலை அவசியம் என்று உணர்ந்து அச்சியந்திரசாலை ஒன்றை நிறுவி அதற்கு வித்தியானுபாலன் அச்சு இயந்திரசாலை எனப் பெயர் கொடுத்தார்.

அச்சியந்திரசாலையை நிறுவிப் பல நூல்களைப் பரிசோதித்தும், இயற்றியும் வெளியிட்டமை யால் தமிழும் சைவமும் புதுமெருகுற்றன. சைவம் தழைத்தது. அவரது நூல்கள் சைவ அன்னைக்கு மிக்க அழகினைத்தரும் அணிகலன்களாயின. இதனை கும்பகோணம் முருகேசப்பிள்ளை யவர்கள் சொல்லுகிருர்கள்.

திங்களணி செஞ்சடையான் றேவனெ வந்துதவும்
அங்கவனூல் நூலாயமர்ந்ததுவும் — எங்குமிசை
கொண்டி யாழ்ப்பாணங் குலாவியதும் ஆறுமுக
அண்டர் பிரான் வந்த 'பின்பேயாம்.

கிறிஸ்துவ மதப் பாதிரியார்கள் எழுதியும் பேசியும் வந்த சைவ சமயத் தூஷணங்களை கேட்ட நாவலர் அவற்றைச் சகிக்கலாற்ருது கண்டனப் பிரசுரங்களையும் கண்டனப் பேச்சுக்களையும் செய்தார். இதனுல் பாதிரிமாரது மாயையினுல் மயங்கிய மக்களின் அஞ்ஞானம் அகன்றது. சைவ சமயத்திலே பற்றும் நம்பிக்கையும் கொண்டு அதைப் போற்றி வருவாராயினர்.

நாவலர் பெருமான் சைவ சமயத்தை அதன் உட்பொருளை விளங்காது நடந்த சைவசமயி களையும் கண்டித்து அவர்களைத் திருத்தினர். இதனுல் சைவத்தின் மாசு நீங்கிற்று.

நாவலர் பெருமான் சைவக் கோவில்களின் நிலைகண்டு மனம் வெதும்பி அவற்றைப் புனருத் தாரணஞ் செய்யத் திடசங்கற்பம் செய்தார். அதன் பிரகாரம் எத்தனையோ கோயில்களைப் புனருத்தாரணஞ் செய்தார். திருக்கேதீச்சரத்திலே கும்பாபிஷேகம் நடைபெற மூலகாரணமாயி ருந்து திருப்பணியைத் தொடங்கியவர் நாவலர் அவர்களே.

இவ்வாறு வாழ்நாள் முழுவதும் நைட்டிகப் பிரமச்சாரியாகவே இருந்து சைவப்பணி புரிந்து சைவத்தைக் காத்த நாவலர் பெருமான் பிறந்திருக்காவிட்டால் நம்மில் எத்தனையோ பேர் ஏன் முழு யாழ்ப்பாணமுமே கிறிஸ்தவ மயமாகி இருந்திருக்கும். இத்தகைய பேராபத்தில் இருந்து நம்மைக் காத்த நாவலர் பெருமானை சமயத்தின் காவலர், ஐந்தாம் சமயக் குரவர், அறுபத்து நான்காவது நாயனுர் என்றெல்லாம் அழைத்தால் மட்டும் போதுமா? இல்லை, நாமும் அவர் வழி நின்று சைவத்தை வளர்க்க வேண்டும்.

பொ. பாலகுமார்
II B. M. T

*With best Compliments*

*from*

# Rupa Transworld

Sole Distributors of

**"CHEMFLO"**

Process Pumps, Ball Valves and Gate Valves

Manufactured by Akay Industries to International Standards

30, HYDE PARK CORNER, COLOMBO - 2.

Telephone: 21551 – 26482

The Essence of knowledge is
Having it to apply it

*With best Compliments from*

# M. R. FERNANDO & CO. LTD.

Fernando Town,
**HATTON.**

Phone: 0512 } 471 / 516 / 517

*With the Compliments of*

# OCEAN CARRIERS LIMITED

SHIPPING AGENTS

Islandwide Road Transport of Heavy Cargoes

155, Muthuwella Mawatha,
Colombo-15.

Phone: 35948-33608
Telex: 21313

With best Compliments from

# RAJA PRESS

92, Pamankade Road,
Colombo - 6.

T'phone: 85328

# POLYESTER OVERLAID DECORATIVE PLYWOOD

In a Variety of

**WOOD GRAIN, MARBLE & FLORAL DESIGNS FOR FURNITURE, PANELLING, PARTITIONS**

**BEAUTIFUL & TRENDY**

# CANDY

*REFRIGERATORS*
*DEEP FREEZERS*
*COOKERS*
*AUTOMATIC CLOTHES WASHING MACHINES AND DISH WASHERS*

ELEGANT FUNCTIONAL AND RELIABLE

# LUXOR

COLOUR TV

OF

SWEDEN

ITS NOT BETTER
ITS THE BEST

# LEICHNER

**THEATRICAL MAKE - UP**

ITS DRAMATIC

Available from Sole Agents

# SHERMAN SONS LTD.

26, SRI SANGHARAJA MAWATHA,
COLOMBO 10. Tele: 35566-68, 36761-62.

# ★ " நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே " ★

- சி. கதிர்காமநாதன் -

இந்நூற்றாண்டின் விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளின் கொடுமுடிகளாவன சார்பியல் கோட்பாடு (*Relativity Theory*) சக்திச் சொட்டு எந்திரவியல் (*Quantum Mechanics*) அணுவியல் பௌதீசம் (*Nuclear physics*) எனலாம். இவை மரபுவழி வந்த கண்டுபிடிப்புக்களை விட (நடைமுறை சாதனைகளிலும், விஞ்ஞானிகளின் சிந்தனை ஓட்டத்திலும்) மிகுந்த வேறுபாடுடையன. உதாரணமாக அணுக்குண்டு என்ற ஒரு ஆயுதம் இருக்கிறது என்ற விஷயமே வல்லரசுகளிடையே ஒரு வித்தியாசமான பயம் கலந்த உறவை தாபித்துள்ளது. மக்களின் மனதிலும் இவ் விஷயம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது அணுக்குண்டு ஏற்படுத்தக்கூடிய முற்றான அழிவு என்ற சாத்தியக்கூறு பற்றிய பயம். இது தவிர இக் கண்டுபிடிப்புக்களின் தன்மை சம்பிரதாய விஞ்ஞான சிந்தனை ஓட்டத்தில் ஒரு முக்கிய திருப்புமுனையாகி சம்பிரதாய விஞ்ஞான தத்துவப் பின்னணிக்கு உட்படாமல் முரண்பட்டு நிற்கின்றன. அரிஸ்டோடல், யூகிலட் போன்ற கிரேக்க ஞானிகளின் தருக்கம் (*Logic*) மிகுந்த தத்துவ பாரம்பரியத்தில் வேர்விட்டு இன்றும் அவற்றையே சார்ந்து காலத்தால் கூர்தலடைந்த (*Evolved*) மேற்கத்திய தத்துவப் பின்னணி, 20ம் நூற்றாண்டு வரை எல்லா விஞ்ஞான வளர்ச்சியையும் தன்னகத்தே உள்ளடக்கி வியாபித்தது. அத்துடன் விஞ்ஞான வளர்ச்சிக்கும் ஊட்டம் அளித்து வந்தது.

மேற்குறிப்பிட்ட புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் எவ்வாறு மேற்கத்திய மரபுவழி தத்துவச் சிந்தனைக்கு முரண்பட்டு நிற்கின்றன என்பதையும் அதே சமயம் அவை எவ்வாறு இந்து சமய புத்த மதச் சித்தாந்தங்களுக்கு இசைவாகி அமைதி காண்கின்றன என்பதையும் கவனிக்க முன்பு இத்துறைகளின் முன்னோடிகளான நால்வர் இம் முரண்பாடு பற்றிக் குறிப்பிட்டதை இங்கே சொல்லலாம்.

**அணுவின் அமைப்பு**

இரதர்போட் பிரபு அணுவை (*atom*) சக்தி மிகுதியாக்கப்பட்ட துணிக்கைகளினால் (*High energy particle*) மோதி அதன் விளைவாய் ஏற்பட்ட பலாபலன்களைக் கண்டறிந்தார். இப்பரிசோதனைத் தொகுப்பு மூலம் அணு என்பது ஒரு மையக் கருவை கொண்டதாயும் அக் கருவைச் சுற்றி வேறு வேறு மண்டலங்களில் (*orbits*) சுழன்று கொண்டிருக்கும் எலத்திரன்கள் கொண்ட ஒரு தொகுப்பு என்பது தெரிய வந்தது. சுற்றிக் கொண்டிருக்கும் எலத்திரன் துணிக்கைகள் மிகவும் பாரம் குறைந்த எதிர் மின்னேற்றம் கொண்டவை எனவும் கருவானது (*Nucleous*) நேர் மின்னேற்றம் கொண்ட புரோட்டன், மின்னேற்றம் இல்லாத நியூதரன் ஆகியவையை உள்ளடக்கியது என தெரிந்தது. இந்த ரதர்போட் அணு அமைப்பு மாதிரி (*Model*) சூரிய குடும்பத்தை ஒத்தது எனக் கொண்டு நியூகிளியசை சூரியன் போன்று நடுமையமாகவும் அதைச் சுற்றி வெவ்வேறு விட்டங்களில் எலத்திரன்கள் சுற்றிக் கொண்டிருக்கிறது எனவும் கூறப்பட்டது. ஒரு மூலகத்தின் ஆகச் சிறிய அடிப்படை அலகு அணு என்று பல காலமாக நம்பி வந்த விஞ்ஞான உலகம் அணுவை விட அடிப்படையான துணிக்கைகள் எலத்திரன், நியூத்திரன், புரோத்தன் என ஏற்றுக் கொண்டது. ஒரு மூலகத்திற்கும் பிறிதொரு மூலகத்திற்கும் வித்தியாசம் அதன் அணுக்கருவில் இருக்கும் புரோத்தன்களின் எண்ணிக்கை, நியூத்திரன் எண்ணிக்கை, சுற்றிக் கொண்டிருக்கும் எலத்திரன்களின் எண்ணிக்கை என்பவற்றினால் மட்டும் ஏற்படுகிறது. இதில் எலத்திரன்களின் எண்ணிக்கை புரோத்தங்களின் எண்ணிக்கையை கொண்டிருக்கும்.

The violent reaction on Recent Devolopment of Modern physics can only be understood when one realises that here the foundations of physics have started moving; and they this motion has caused the feeling that the ground would be cut from Science.

—Heisenberg—

All my attempts to adopt the theoritical foundation of physics to this (new type of) knowledge failed Completely. It was as if ground had been pulled out from under one, with no firm foundation to be seen any where, upon which we could hence built.

—Albest Eiustein—

The great extention of our experience in recent years has brought to light the insufficency by our simple mechanical Conceptions and as a Consequence has taken the foundation on which the customery interpretation of observation was based.

—Niels Bohr—

Either seientists one have become mad or physics (new) has become mad.

—George gamove—

இவ்வணு வமைப்பு மாதிரி பல விடயங்களை விளங்கிக் சொள்ள ஏதுவான எளிய மாதிரி (*Simple Model*) ஆனால் வேறு பல சிக்கலான புதிர்களை இவ் அமைப்பு மூலமாக விளக்க முடியவில்லை.

நமது கண்ணுக்கு திண்மையாகத் தெரியும் பொருட்களின் அடிப்படை அமைப்பு சடத்துவமானதல்ல. (*Inert*) மிக்வும் வேகத்துடன் தத்தமது தன்மைகளுக்கேற்ப சுற்றிக் கொண்டிருக்கும் துணிக்கைகளினாலானது தான் பொருட்கள் என்பதும் அவற்றின் இயக்கங்களின் சிக்கலான ஆனால் சீரான தன்மை வியக்கத்தக்கதென்பதும் கண்டறிந்தார் இரதர்போட். தருக்கத்திற்கும் புலனறிவுகளுக்கும் மிக உயர்ந்த இடம் கொடுத்து அமைக்கப்பட்ட விஞ்ஞானச் சிந்தனைக்கு இம்மாதிரியாக புலன்களின் உணர்ச்சிக்கும் உண்மைக்கும் உள்ள இடைவெளி விஞ்ஞானிகளுக்கு அதிர்ச்சியிலிருந்து முதன் முறையாக "சிந்தனைக்கு எட்டாத" என்ற சொற்பதம் விஞ்ஞான சிந்தனையுள் நிர்ப்பந்தமாய் நுளைந்தது.

நம் கண்ணால் காணும் போதும் வேறு புலன்களால் உணரும் பொழுதும் பலவாறுகத் தோற்றமளிப்பவை அடிப்படை அமைப்பில் ஒருமைப்பாட்டைக் காண்பிக்கின்றன. கிழக்கத்திய தத்துவம் இப்படியான நிலையை இயல்பாகவே ஏற்றுக் சொள்வதுடன் அதை விளக்குவதற்கும் இப்படியான ஒன்றிற்கு பல்வேறு தோற்றமுள்ள நிலையையே தனது சித்தாந்தத்தின் மையமாகவும் கொள்கிறது. ஐந்து குருடர்கள் ஒரு யானையைப் பார்த்தனர். எப்படி? தடவிப்பார்த்தார்கள். அப்படிப் பார்க்கும்போது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியாக யானை தெரிகிறது காலைத் தடவியவன் உரல் போல் என்றான். காதைத் தடவியவன் சுளகுபோல் என்றான். துதிக்கையைத் தொட்டவன் உலக்கை என்றான். ஆனால் யானை என்னவோ இச் சொற்பதங்களை உள்ளடக்கியும் அதே சமயம் அவற்றை மீறியும் நிற்கிறது. ஐந்து குருடர்கள் என்னும் பொழுது பொதுவாக ஐம்புலன்களைக் குறிக்கும்.

தனது சார்பியல் கோட்பாடுகளை மேற்தோற்றமாகப் பார்க்கும்போது அங்கு தென்படும் முரண்பாடுகளையும் ஐன்ஸ்டீன் இப்படியான ஒரு உபகதை மூலமாகவே விளக்கினர். (குருடன் கொக்கைப் பார்த்தது அவரின் உபகதை) ஐன்ஸ்டீன் மற்றவர்களின் சிந்தனை எல்லையைக் கேலி செய்யவில்லை மாறுக புலன்களின் குறுகிய தன்மையே அப்படிக் குறிப்பிட்டார்.

**சக்திச் சொட்டு எந்திரவியல் (Quautum Mechanics)**

றதர்போட்டின் எளிய சூரிய குடும்ப அணு அமைப்பு மாதிரியை கொண்டு பல நுண்மையான சிக்கல்களை விளங்கப்படுத்த முடிவில்லை. அணு அமைப்புக்கும் பின் அணுசக்தி எந்திரவியலுக்கும் வித்திட்டது. சக்திச் சொட்டு எந்திரவிலாகும். இச் சக்திச் சொட்டு தத்துவத்திற்கு

மாக்ஸ் பிளாங் (*Max Plank*) நீல் போர் (*Niel) Bohr)* டிருக் (*Dirac*) ஒப்பன் கைமர் (*Oppenheimer) Heisnberg* ஆகியோரின் கூட்டு முயற்சி என்று சொல்லலாம். இவர்கள் ஐயன்ஸ்டீனின் சார்பியல் கொள்கைகளை துணையாகக் கொண்டு புதிய துறையை நிறுவினுர்கள். அத்துடன் பல பரிசோதனை விஞ்ஞானிகளும் இக் கொள்கையின் பலாபலன்களை ஆய்வு கூடங்களில் பரிசோதித்து நிருபித்தார்கள்.

அணுக்கரு (*Nucleus*) அணுவின் பாரம் அல்லது திணிவின் மிகப் பெரும் பகுதியாகும் என முன்னர் குறிப்பிட்டோம். அத்துடன் அணுக் கருவின் அளவு அணுவின் அளவை விட மிக மிகச் சிறியது. ஒரு அணுவானது (அதாவது கருவைச் சுற்றிச் சுழலும் கடைசி எலத்திரன்களின் பாதை விட்டம்) கொழும்பு நகரமண்டபம் அளவு பெரிதாயின் அணுக்கருவானது மண்டபத்தில் மையத்திலுள்ள ஒரு ஊசி முனை அளவு என்று கொள்ளலாம். இடையில் வெறும் வெளி அங்குமிங்கும் சில பாதைகளில் எலத்திரன் துணிக்கை ஊடாடிக் கொண்டிருக்கிறது. எப்படி இத்தகைய ஒரு அமைப்பு மிகவும் ஸ்திரமாக இயங்குகிறது என்பதும் ஒரு வியப்புக்குரிய பிரச்சினை. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு சக்திச் சொட்டு எந்திரவியல் பின்வரும் சில விதிகளை கொண்டு விளக்க முற்படுகிறது.

**கைசன் பேர்க்கின் திடமின்மைக் கோட்பாடு (Hisenberg Uncertinity Principle)**

அணுக்கருவைச் சுற்றிவரும் எலத்திரனின் பாதையை அறிய முடிந்தால் எலத்திரன் துணிக்கையை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எங்கு இருக்கும் என்று வரையறுக்க முடியாது.

வேகத்தை வரையறுக்க முடிந்தால் வேகமாக ஊடாடும் எலத்திரன் தனது திணிவுத் தன்மையை திண்மத்தை இழந்து வெறும் வெளியில் இருந்து வரும் சக்தி அலைத்தன்மையை வெளிப்படுத்துகிறது. இதுவரை திண்மையான பொருட்களான எலத்திரன், புரோத்தன் ஆகிய துணிக்கைகளைக் கொண்டு உருவான அமைப்பு அணு என்ற தன்மை மாறி சக்தி அலை சில குறிப்பிட்ட விதி முறைகளுக்கு இசைய ஆடும் நர்த்தனமே திண்மையான அணுவாக பொருளாகத் தென்படுகின்றன.

இப்பொழுதுள்ள வளர்ச்சி நிலையில் சக்திச்சொட்டு எந்திரவியல் எலத்திரன் என்ற ஒரு பொருள் இருப்பதைக் கூறமுடியாதென்றும் அப்பொருள் இருக்கும் சாத்தியக்கூற்றை (*Probability*) மட்டும் சொல்லலாம் என்றும் வரையறுக்கிறது.

சடத்வதுப் பொருள் — சக்தி என்று குறிப்பிடும் தீர்மானமான துவைத நிலைமாறி சடத்துவ-சக்தி என்று கோட்பாட்டின் நிச்சயமில்லா அத்துவித நிலையையே சக்திச் சொட்டு எந்திரவியல் காட்டுகிறது. அப்படியாயின் எலத்திரன், புரோத்தன் போன்ற துணிக்கைகள் பிரித்தெடுக்கப்பட்டு இதுதான் இது என்று நிச்சயப்படுத்தப்படவில்லையா? ஒரு குறிப்பிட்ட நோக்குடன் ஒரு துணிக்கையை பார்வைக்காக (*observation*) பிரித்தெடுத்தால் அப்படிப் பிரித்தனுல் உண்மையான, இயல்பான தன்மை மாறி இயல்பான சூழலில் இயங்கும் தன்மைக்கு தொடர்பில்லாது ஒரு தனிப்பட்ட துணிக்கையாகி வேறுபட்ட இயல்புகளைக் காட்டும். இதைப் பற்றி *Heisenberg* 'இங்கு நாங்கள் பார்ப்பது உண்மையான இயற்கையல்ல. ஆனுல் எங்கள் ஆராயும் முறைக்கு ஆட்படுத்தப்பட்டு அதற்கேற்ப மாறிய இயற்கையையே பார்க்கிறோம்.'' இதைப் பற்றி *Wheeler* குறிப்பிடும் பொழுது ''பார்வையாளன் *Observer* என்ற சொல்லை அடித்துவிட்டு பங்கு கொள்பவன் *Participater* என்று சொல்லை புகுத்த வேண்டும். மிகவும் விநோதமாகா முறையில் அண்டம் பங்கு கொள்பவனின் அண்டமாகிறது.''

பார்க்கப்படும் தோற்றப்பாடும் (*Phenoreion*) பார்வையாளனும் இருமையற்று (*Non Dualinticaly*) ஒன்ருகும். உன்னத நிலையில்தான் மனம் இயற்கையுடன் இணைந்து செயற்படுகிறது என்பது ரிஷிகளின் வாக்கு. இதையே ''நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே'' என்று சிவபுராணத்தில் மணிவாசகர் கூறுகிருர். ஒரு உப்புத்துணிக்கையானது தண்ணீர் எப்படி இருக்கும் என்று பரிசோதித்து மற்றத் துணிக்கைக்கு சொல்ல நீருக்குள் சென்றதாம் நீர் எப்படி

இருக்கும் என்று பார்க்க இறங்கிய துணிக்கை நீருடன் அத்வைதமாகி விட்டது, நீரின் தன்மையை வெளியேவந்து சொல்ல அது உப்பாகவே இருக்கவில்லே. இது இராம கிருஷ்ண பரமஹம்சர் சொன்ன உபநிடதக் கதை.

அணுவியல் சார்பியல் கொள்கையை சுட்டி நிற்கும் புலன்களால் உணரப்படாத சொற்களால் சொல்லமுடியாத, சமன்பாடுகளால் மட்டும் மட்டுப்படுத்த முடியாத ஒரு இயற்கை நியதி ஒரு அத்வைத நிலே விஞ்ஞானிகளுக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சி தருவதாகவே இருந்தது. இந் நிலையை அவர்கள் விபரிக்கும் போது தன்னிச்சையாகவே வெறும் தருக்கத்தை மீறிய சொற்றொடர்களே பிரயோகிக்க ஆரம்பித்தார்கள். எலத்திரனின் சாத்தியக்கூற்று நிலையை விபரிக்கும் ஒப்பன் கைமர் ''உதாரணமாக எலத்திரனின் (தன் பாதையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில்) எங்கு இருக்கிறது என்று சொல்ல முடியுமா என்ருல் நாம் ''இல்லே'' என்போம். எலத்திரனின் நிலே நேரத்துடன் மாறுபடுகிறதா என்ருல் நாம் ''இல்லே'' என்போம். எலத்திரன் இயக்கமற்று இருக்கிறதா என்ருல் ''இல்லே'' என்போம். அது இயக்கத்தில் இருக்கிறதா என்ருல் ''இல்லே'' என்போம்''.

இது உபநிடதத்தில் ''பிரமன் யார்?'' என்று ஆராயும்போது ''இல்லே, இல்லே'' என்றும் சிந்திய தத்துவத்தை ஒத்திருக்கிறது.

''அது இயங்குகிறது அது இயங்காமல் நிற்கிறது.
அது தூரத்தில் அது அண்மையில்
அது இவற்றில் எல்லாவற்றிலும் ''அது இவற்றில் மேவி அப்பாலும் உள்ளது''.
**It moves it moves not**
**It is far and it is near**
**It is within all this and it is outside of all this**

இப்படியான அத்வித நிலையை மையமாகக் கொண்டே இந்துசமய சித்தாந்தங்கள் எழுந்தன. சிவவாக்கியர் பாடல்களிலும் இப்படியான கருத்துக்கள் பொதிந்துள்ளது.

''அரியமல்ல அரனுமல்ல அப்புறத்தில் அப்புறம்
கருமை செம்மை வெண்மையைக் கடந்து நின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பற்றுமின்கள் பற்றுமின்
துரியமும் கடந்து நின்ற தூர தூர தூரமே''
''தூரம் தூரம் தூரமென்று சொல்லுவார்கள் சோம்பர்கள்
பாரும் விண்ணும் எங்குமாய்ப் பரந்த அப்பராபரம்
ஊரும் நாடுங் காடுமோடி உழன்று தோழமைகாள்
நேரதாகவும் முளே அறிந்துணர்ந்து நில்லுமே,

திருவாசகத்தில் திரு அண்டப் பகுதியில் வரும்
''நிற்பதும் செல்வதும் ஆனேன் காண்க"
It moves, yet it Stays என்று சக்திச் சொட்டு எந்திரவியலின்
கோட்பாட்டை ஒத்திருப்பதைக் காணலாம்,

ஒளியியல் கோட்பாட்டில் இன்றுவரை விஞ்ஞான புதிராக இருந்து வருவது ஒளிமின் தன்மையாகும். ஒளியியல் கோட்பாட்டில் ஒளிக்கற்றையானது போட்டன் *(Photon)* துகள்களானது என்று கொள்ளப்பட்டு, ஒளியின் பொருட்களே ஊடுருவுதல், ஒளிமின் தோற்றப்பாடு போன்றவை விளங்கப்படுத்தப்பட்டன. பின்னர் மாக்ஸ்வெல் மின்காந்தவியல் வியாக்கியானம் ஒளியையும் மின்காந்த அலேக்குடும்பத்தை சார்ந்த ஒரு தோற்றம் எனக் கொண்டு ஒளியின் தலேயீடு *(Intaference)* போன்ற சில தோற்றப்பாடுகளே செம்மையாக விளக்கினுர்கள். இக்கோட்பாட்டைக்

கைக்கொண்டால் *Photoelectric* தன்மை முரண்பட்டன. இன்று சில விடயங்களை விளக்குவதற்கு ஒளி *Photon* துணிக்கைகளினுலான கற்றையாகும் எனவும் கொள்ள வேண்டியுள்ளது ஒளியின் இருமை *[Dualistic Nature]* விஞ்ஞானிகளுக்கு புதிராகவே இருந்துவந்தது. இப்படியான விஞ்ஞான தத்துவங்கள் திருவாசக திருவண்டப்பதிகுயில் மணிவாசகரினுல் எடுத்தாளப்பட்டிருக்கிறது

"அண்டப்பகுதியான உண்டப் பிறக்கம்
அளப்பருந்தன்மை வளப்பெருங்காட்சி
ஒன்றனுக் கொன்று நின் றெழில் பகரின்
நூற்றெருரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் நுண் அணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன், தெரியின்"

ஒன்றனுக்கொன்று என்பதில் தொடர்புத் தத்துவமும்,

"இல் நுழை கதிரின் நுண் அணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன்" என்பதில்

ஒளியின் இருமைத்தன்மையும் *(Dualistic Nature)* எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

இதை திருமூலர்

"அணுவில் அணுவினை ஆதிப்பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்
டணுவில் அணுவை அணுகவல் லார்கட்
கணுவில் அணுவை அணுகலு மாமே"

என்கிறுர்.


*With best Compliments from*

# SUWADHIKA TEXTILES

**WHOLESALE DEALERS IN TEXTILES**

Importers of Fancy Goods

Moter Cyclos Etc.

125 A, 3rd CROSS STREET,

COLOMBO - 11.

Phone: 29055

WITH BEST COMPLIMENTS

FROM

# SIVASAKTHY STORES

Importers General Merchants & Estate Suppliers

No. 240, KEYZER STREET,

COLOMBO - 11.

Phone: 21636

With best Compliments

from

# Sri Lanka Associated Enterprises

No. 20, Galle Face Court,

COLOMBO 3.

Telephone: 29038 - 22947

நவராத்திரியின் காரணமாக

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் நடாத்திய

**கட்டுரைப் போட்டியில் கீழ்ப்பிரிவில் 2 ம் இடம் பெற்ற கட்டுரை.**

# நவராத்திரி விழா

**( செல்வன். அமர்நீதி 4 $T_1$ )**

அகில உலகத்தையும் இயக்குபவள் அன்னை பராசக்தி. அவளின் அருள் இல்லையேல் இவ்வுலகில் எதுவுமில்லை. அத்தகைய அன்னையை பக்தியுடன் போற்றி வழிபட்டு விமரிசையாக கொண்டாடப்படும் விழாவே நவராத்திரி ஆகும். நவராத்திரி என்பது ஒன்பது இரவு எனப் பொருள்படும். இந்த ஒன்பது தினங்களிலும் இராப்பொழுதில் சிறப்பாக விழா நடைபெறுகிறது. இவ் விழாவை வீடுகளிலும் ஆலயங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் கொலு வைத்து சிறப்பாக கொண்டாடுவர், அன்னை படைப்புகள் எல்லாவற்றிலும் நிறைந்துள்ளதை விளக்குவதற்கு கொலு அமைப்பார்கள். முதல் மூன்று நாட்களும் வீரத்திற்குரிய துர்க்கையை வழிபடுவர். அடுத்து மூன்று தினங்கள் செல்வத்திற்குரிய இலட்சுமியை வழிபடுவர். கடைசி மூன்று தினங்களும் கல்விக்குரிய சரஸ்வதியை வழிபடுவர். பத்தாம் நாள் விஜய தசமி வெற்றிக்குரிய நாளாகும். இந்நாட்களில் முதல் எட்டு நாட்களிலும் பழம் அல்லது பணிகாரம் உண்டு, ஒன்பதாம் நாள் உபவாசமிருத்தல் நன்று. இந்நாட்களிலேயே தேவி அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டினாள். ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் எமக்குத் தருபவள் அவளே. ஆகவேதான் கலைக்குரிய ஆயுதங்கள் அத்தனையும் அவளுக்கு முன்னே வைத்து கலை ஞானத்தை தருவாய் என்று வழிபடுகிறோம். இந்நாட்களில் இந்துக்களாகிய நாம் அனைவரும் பக்தியுடன் வழிபட்டால் வேண்டிய வரம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.


WITH BEST COMPLIMENTS FROM

**Annalackshmi Gold House**

137, SEA STREET, COLOMBO - 11.

Telephone: 28787

*With best Compliments from*

# PEARLITES

Dealers in all kinds of

* ELECTRICAL GOODS
* RADIOS
* HOUSE WIRING ACCESSORIES

Importers, Engineers, Contractors, Merchants and Stationers.

78, MALIBAN STREET,

COLOMBO - 11.

Phone: 24821

WITH BEST COMPLIMENTS
FROM

# EAST - WEST ENTERPRISES LTD.

CEYLINCO HOUSE
69, JANADHIPATHI MAWATHA,
COLOMBO - 1.

Tele Nos:
36543 - 36405
20941 - 36620

Container Yard
346/3, Dutagemunu Mawatha,
Peliyagoda,
KELANIYA.

*With the Compliments of*

# *Finance and Land Sales Ltd.*

WITH BEST COMPLIMENTS

FROM

N | B

**NAYAGAM BROS.**

PAPER AND STATIONERY MERCHANTS

149, Fourth Cross Street,
COLOMBO - 11.

Phone: 28805 - 26239

**FOR DOUBLE SECURITY**

**FOR YOUR**

SELF, PROPERTY, FACTORY, BUNGALOW, ESTATE ETC., ETC.,

Contact

**EX - SERVICES UNITED SECURITY SERVICES**

**No. 12, Muhandiram Road, Kollupitiya.**

**Dial: 37137**

WE ARE ALWAYS AT YOUR SERVICES.

# நடப்பு வருடத்தில் நாம்....

ஆதியிலே பிறந்து, மதுரைத் தென்றலிலே தவழ்ந்து, காலத்தால் அழியாது, எட்டுத் திக்கும் மணங்கமழ்ந்து நிற்கும் இந்து மதத்திற்கு, பெருமை மிகு அறநெறியும், இந்து கலாச் சாரமும் மறைந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் எம் மதத்திற்கு புத்துயிர் அளிக்கும் முயற் சியில் இறங்கியுள்ள நாம் எமது பங்களிப்பை செவ்வனே செய்து வருகிறோம் என்பது வெள் ளிடைமலை.

எமது கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து வருங்காலத்தில் அவர்கள் இலட்சிய புருஷர் களாய் அமைய தேவையான கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றை இறைஞ்சி எல்லாம் வல்ல தேவிக்கு நாம் எடுக்கும் விழாவில், ''கலைமகள் விழா''வில் ''சிவ சக்தி'' எனும் சிறப்பு மலரை மீண்டும் பத்து ஆண்டுகளுக்குப் பின் மலர செய்ததுடன் அம் மலர் பக்தி மணம் கமழவும் ஒவ்வொரு ஆண்டும் மலர வேண்டும் எனவும் சரஸ்வதி தேவியை பிரார்த்திக்கின்றேன்.

இம்முறை இறுதிப் பரீட்சை எமது பணியை செவ்வனே செய்ய முடியாமல் குறுக் கிட்டபோதிலும் இப் பருவத்தில் நாம் எம்மால் இயன்றவரை ஆற்றிய சேவைகளை, எமது மாணவரிடையே சைவ உணர்வு தளைத்தோங்க நாம் செய்த பணியை உங்களுடன் பகிர்வதில் பெருமையடைகின்றேன்.

''சிறப்பு சொற்பொழிவு'': ஒவ்வொரு பௌர்ணமிக்கும், முதல் தினத்தன்று சைவ நெறி யின் கண்ணுள்ள நற்சிந்தனைகளை, அறநெறியினை மாணவருள்ளத்தினில் 'பசுமரத்தாணி'போல் பதித்திடப் பெரியோர் பலரின் கருத்துரைகளை சொற்பொழிவாக ஒழுங்கு செய்தோம்.

''போட்டிகள்'': மாணவர்களது உள்ளத்தில் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணர்வ தற்கான முயற்சிகளை மேற்கொண்டு அதில் வெற்றியுமடைந்தோம். கட்டுரை, பேச்சுப் போட்டிகளை மேல், மத்திய, கீழ் பிரிவுகளின் அடிப்படையில் வைத்து அதில் தரமான கட்டுரை களை 'சிவசக்தி' மலராகிய இம் மலரில் இடம்பெறவும் ஒவ்வொரு பிரிவில் முதல் மூன்று இடங் களுக்கு பரிசில் வழங்கவும் ஒழுங்கு செய்து உள்ளோம்.

''கலைமகள் விழா'': இன்று ஆசிரியர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள் ஆகியோரின் ஆசியுடனும் பழைய, தற்போதைய மாணவர்களின் ஒத்துழைப்போடும் மிகுந்த பொருட் செல வில் பக்தி மணங்கமழ, முத்தமிழ் கலைகளும் அரங்கில் நடைபெற நவராத்திரி விழாவை, சரஸ் வதி பூஜையை, ''கலைமகள் விழா'' எனும் பெயரில் அரங்கம் ஏற்றி மற்ற கல்லூரிகளுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றோம்.

இவற்றுடன் எமது பதவிக்காலத்தில் விவேகாநந்த பரீட்சைக்காக இந்து மாணவர்களை தயார் செய்து அனுப்பும் முயற்சியிலும், ''கலைவிழா 80'' ஐ எமது தோழமை மன்றங்களான தமிழ் இலக்கிய மன்றத்துடனும் தமிழ் நாடக மன்றத்துடனும், இணைந்து வெகு விமரிசையாக கொண்டாடுவதும், வழமையாக இந்து மாணவர் மன்றம் நடாத்தும் பரத நிகழ்ச்சியை நடாத் துவதும் போன்றவற்றை முறை தவறாமல் சிறப்பாக செய்ய உத்தேசித்துள்ளோம்.

எமது பணிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்துதவிய பெரியோர்கள், ஆசிரியர்கள், பெற் றோர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொண்டு அது வருங்காலத்தில் நிலைத்திருக்க வும், இக் ''கலைமகள் விழா'' பக்தி மணம் கமழ, சபையோருக்கு தேனாய், அமுதாய், தித்திக் கும் பழமாய், சுவைமிகு கரும்பாய் அமைந்து உங்களுக்கு ஆனந்தமளிக்கவும், ''சிவசக்தி'' மலர் சிறப்பாய் அமையவும் எல்லாம் வல்ல தேவியை வேண்டிக்கொண்டு அமைகிறேன்.

அருணாசலம் கருணாதேவா
செயலாளர்
இந்து மாணவர் மன்றம்

With best Compliments

from

# Greenlands Hotel Ltd.

**A FIRST CLASS**

**RESIDENTAIL HOTEL FOR VEGETARIANS**

3 - A, Shrubbery Gardens, Galle Road,

BAMBALAPITIYA — COLOMBO - 4.

Telegrams: 'GREENLANDS' Telephone: 85592 & 81986

With the best Compliments

from

**PETTAH TRADE COMPANY**

**COMMISSION AGENTS**

90, 4th CROSS STREET,

COLOMBO - 11.

WITH BEST COMPLIMENTS

FROM

**MASCONS LIMITED.**

175, Sri Sumanatissa Mawatha,

COLOMBO.

**Phone: 25561, 2 & 3**

Space donated

by

A

Well Wisher

# PILOT SUPER

## GIVES YOU 7 CREDIT'S AND DISTINCTION IN WRITING STYLE

- Available in Blue, Black and Red with both fine and medium point and plastic neck...... .....
- Visible ink supply, easy to see through transparent plastic body ...........
- The Pilot name ............... A name that had stood for perfection in writing instruments for over half a century............
- Perfectly balanced construction, Feels comfortable in your hand, even after hours of writing...............
- Exclusive ribbed slip proof grip..............
- Super stainless steel point reinforces ball for maximum support ...........
- Rugged, Tungsten Carbide ball assures smooth, even writing with no skips or smudges............

**REFILLS FREELY AVAILABLE.**

Manufacturers:

## PENPALS LIMITED, COLOMBO.

Distributors:

## SHAW WALLACE & HEDGES LTD.,

535, Kollupitiya Road,

**Colombo - 3.**

PILOT

QUALIFYING GOOD WRITING

*With best Compliments*

*from*

# *M. P. Veeravagu & Co.*

15, POWER HOUSE ROAD,

JAFFNA.

**Branch:**

## M. P. VEERAVAGU & CO.

60, Perakumba Street — Kurunegala.

T'phone: 327

With best Compliments

from

NEWLAND BISCUIT COMPANY

HADENIYA — WERALLAGAMA.

COMPLIMENTS FROM

SHIVAJIS INDUSTRIES

KANDANA:

Manufacturers of

"WHITE TIGER"

BRAND

MOSQUITO COILS

(WITH PYRETHERUM AS INSECT REPLENT INGREDIENT)

*With the Compliments*

*of*

# OCEANIC

P. O. BOX 198
COLOMBO.

*With the best Compliments*

# HAPPYLAND BISGUIT COMPANY

MEDAWALA H. P.

# PLANT A TREE TODAY

The population of this country is expanding fast and with this there is an increasing demand for all forms of timber. We need more houses, schools, factories, public buildings, furniture and a host of other things which require timber for their construction

When the Btitish occupied this country, we had half a million people. At the beginning of this century we had 4 millon people. To day we have 14½ million people and they are richer than any of their ancestors. Their demands for timber would have been unheard of in previous centuries' Trees are being cut down to provide the needs of a bigger and richer population and also to make way for the production of food for these large numbers.

At the beginning of this century, 50% of our country was covered with forests. Today forest covers less then 20% of the land area. The reduction in forest cover may have affected our rainfall, causes soil erosion and and floods and decreases the fertility of the soil- International exports have warned us that desert-like conditions are being established in some patrs of Puttalam and Hambantota.

Think about the value of tree. Start today by planting a tree and tending it still it starts growing. This will be a valuable gift for our next generation.

**INSERTED BY THE STATE TIMBER CORPORATION**

* * *

# மரபு வழி நின்று மாண்புடன் நவில்கின்றோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ | ஈ | கள் | — ஈந்து, விழா அகம் களிப்புறவமையவும் எமது மலர் 'சிவசக்தி' யை அச்சிடவும் வேறு மொழியா அனுமதியளித்த அதிபர் திரு. L. D. H பீரிஸ் அவர்களுக்கும், | எ | திருரை |
| உ | வ | மை | — ஒன்றிலா தகைமைப்பெருக்கோடு நிறைவுற வகித்த திருமதி. சண்முகநாதன், திருமதி. கிருஷ்ணபிள்ளை, திருமதி. சிவகுருநாதன், திருமதி. S. சிறீகாந்தா, திரு. K. கந்தசாமி அவர்களுக்கும், | ம | த்தியஸ்தம் |
| வ | ச | திகள் | — பெருக்கித்தந்து நம் மன அசதிகள் நீக்கித் என முன்வந்துதவிய ஆசிரியப் பெருமக்களுக்கும், | " து | ணை நாம்" |
| ச | க் | திக்கு | — விழாவெடுத்தார் சோதரர் என்று நம் கலந்து பேருதவிகள் புரிந்த பழைய மாணவர்களுக்கும், | க | ருத்தோடு |
| ந | தி | பல | — சங்கமம்போல் பல கல்லூரி மாணவர்களும் புகழ் ஈசன் உமை விழாக்காண அழைப்பை ஏற்று வருகை தந்தமைக்கும், | லை | ங்கம் |
| எ | ம | து | —எவ்விழாத்தனிலும் ஒளியேற்ற ஒருவருண்டேல் டயஸ் அன்றி எவருள்ளார்? அவருக்கும், | ம | கிந்த |
| ம | ல | ரமரும் | — மாதேவி மகிழ் விழாவில் மெருகூட்ட ஸ்டேஜ் நிறுவனத்தின் மேடைக் காட்சிச் சிறப்பிற்கும், | க | லா |
| அ | ர | ங்கம் | —அதிர் ஒலியமைத்து அடடா! இவர் யாவர்எனவி எமக்கு அருமையாய் உதவிய இலக்ரோ டெக்னோ சேவிஸ் நிறுவனத்தாருக்கும், | ள் | ள |
| நா | உ | லர | — நன்றி நவிலினும் ஆகுமோ ஈடு இந்த தாரர்க்கு...... அவர்தம் அருமைப் பணிதனுக்கும், | வி | ளம்பர |
| உ | த | விகள் | —எமக்களித்தார், விளம்பரம் சேகரித்தார், இவ்வி சிறப்பிக்கு ஆனது அனைத்தும் செய்தார் அவர்கள் எல்லார்க்கும், | பூ | வினைச் |
| க | வி | த்துவம் | — குன்று, கருத்தாழம்கொண்ட கட்டுரை பல அர்ப்பணித்த அன்பர்க்கும், கவிஞர்க்கும், | வ | ரைந்து |
| மா | யோ | கினி | — மலர்மங்கை, கலைமகள் விழாமலரில் பேரின்ப தெய்வீகத் திருவுருவப் படம் நல்கிய மெய்கண்டான் நிறுவனத்தினருக்கும், | ரு | சிகூட்ட |
| பெ | ரு | கிய | —பல பணிகளிடை சிறியோர் நமக்கிடமொதுக்கி காட்டிக் கவின் மலரினை அச்சிட்ட கலா அச்சகத்தினருக்கும், | கை | வண்ணம் |
| ஊ | க் | கமொடு | — நாமெடுக்கும் விழாக்காண வருகைதந்து நீ நிறைந்த சக்தித் திருவருளை நாடியோர்க்கும், | க் | கமற |
| மி | கு | புகழ் | — வேண்டாது திரை மறை ஒளித்து கடுகிக் உதவிய, நாம் குறிப்பிடத் தவறிய பெரியோர்க்கும் அன்பர்க்கும், | கு | றிப்பறிந்து |

சிவசக்தி அருள் கூட்டி நன்றிகள் நவில்கின்றோம்.

இந்து மாணவர் மன்றம், இதழாசிரியர்.

You' ve
got a
friend.
stay with friends.
You'll find it makes
a difference.
A big one.

HOTEL SERENDIB
on the beach at BENTOTA.

LADY HILL HOTEL
KANDY.
Up in the lush green Mountains

HOTEL SIGIRIYA
SIGIRIYA.
In the shade of the fabled Sigiriya Fortress

Managing Agents:

SERENDIB TOURING LIMITED

(The Hotel Management People)

113, HUNUPITIYA LAKE ROAD,
**COLOMBO-2.**
SRI LANKA

P. O. Box: 939 — Tel: 32895 — Telex: 2-1189 AB - Trust
Cables: 'SERENDIB'

*Kala Printers, 258/5, Dam Street Colombo-12.*



எம்முயி ராசைகளும்—எங்கள்
  இசைகளும் செயல்களும் துணிவுகளும்,
செம்மை யுற்றிட அருள்வாய்—நின்றன்
  சேவடி அடைக்கலம் புகுந்துவிட்டோம்.
மும்மையின் உடைமைகளும்—திரு
  முன்னரிட் டஞ்சலி செய்து நிற்போம்;
அம்மைநற் சிவசக்தி—எமை
  அமரர் தந் நிலையினில் ஆச் வாய்,